விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

# வலம்புரி

Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே


சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 11 திங்கட்கிழமை (26.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 007


## திடீரென மயங்கி வீழ்ந்த முன்னாள் போராளி மரணம்

(மல்லாவி)

வவுனியா புளியங்குளம் ஏ9 வீதியில் பேருந்திற்காக காத்து நின்ற முன்னாள் போராளி ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் நெடுங்கேணி குளவிசுட்டான் பகுதியில் வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான முன்னாள் போராளி ஆசீர்வாதம் ஸ்ரீபன் (வயது 36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தினத்தன்று மாலை. பிரஸ்தாப முன்னாள் போராளி யாழ்ப்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜோசப் பரராஜசிங்கத்தின் வழக்கும் நீதி கிடைக்கும் என நம்பவில்லை!

### – மாவை சேனாதிராஜா

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் விசாரணைக்கு எடுக்கப்பட்டாலும் இலங்கை அரசாங்கத்தின் தீர்ப்புக்களின் மீது தாம் திருப்தி அடையவில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டு 11 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு ஆற்றிய நினைவுப் பேருரையில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராஜா இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 11ஆவது ஆண்டு நினைவு

23ஆம் பக்கம் பார்க்க....

# சமஷ்டியை முன்வைப்பதில்லை

# பௌத்தத்திற்கு முன்னுரிமை!

## சம்பந்தன் ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சர் அமரவீர தகவல்



(கொழும்பு)

அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு குறித்த கோரிக்கையையும் முன்வைக்கப் போவதில்லை என தம்மிடம் உறுதியளித்துள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## ரவிராஜ் வழக்கு மேன்முறையீடு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்குத் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய

23ஆம் பக்கம் பார்க்க....

## திருச்சியில் ஈழத்தமிழர் உண்ணாவிரதம்

(சென்னை)

இந்தியாவுக்கு சுற்றுலா விசாவில் சென்றபோது கைது செய்யப்பட்ட ஈழத்தமிழர்களும் அகதி முகாமிலுள்ள ஈழத்தமிழர்களும் தம்மை விடு

23ஆம் பக்கம் பார்க்க....

## கரடி தாக்கியதில் இரு பெண்கள் படுகாயம்

(மல்லாவி)

வவுனியா மாவட்டத்திலுள்ள மாமடு பகுதியில் விறகு எடுக்கச் சென்ற இரு பெண்களை கரடி தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு - கிழக்கு இணைப்பு இனவாதத்தீர்வு வேண்டாம்

### ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வைக்கப்படும் அரசியல் தீர்வானது வடக்கையும் தெற்கையும் இணைக்கும் – இன ஒற்றுமையைக் கட்டியெழுப்பக் கூடிய தீர்வாக இருக்கவேண்டுமே தவிர வடக்கு – கிழக்கை இணைக்கும் இனவாதத் தீர்வாக அமையக்கூடாது என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க....

## ஒற்றையாட்சியைப் பாதிக்கும் அரசியல் தீர்வுக்கு இடமில்லை!

### ஜனாதிபதி உறுதியளிப்பு



(கொழும்பு)

ஒற்றையாட்சிக்கு பங்கம் விளைவிக்கும் அரசியல் அமைப்பை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, புதிதாக உருவாக்கப்பட்ட உலக இலங்கை மன்றத்திடம் உறுதிமொழியை வழங்கியுள்ளதாக அதன் ஒருங்

23ஆம் பக்கம் பார்க்க....

## நத்தார் கொண்டாட்டத்தில் ஆயுததாரிகள் வாள் வீச்சு

### மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நத்தார் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வீச்சு சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மேற்படி வாள்வீச்சு சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த குடும்பஸ்தரான கிறிஸ்தோபர் பிரதீத், நவாலியைச்சேர்ந்த இளைஞரான வின்சன், ஆட்டோச் சாரதியான சாய்சமாறன் ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பகுதியில் நத்தார் கொண்டாட்

23ஆம் பக்கம் பார்க்க....

## விமானம் விபத்து 92 பேர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யவிமானம் நேற்று ஞாயிறன்று கருங்கடலில் விழுந்தது. இதில் விமானத்தில் பயணம் செய்த 92 பேரும் உயிரிழந்தனர்.

சிரியா உள்நாட்டுப் போரில் அந்த நாட்டு அதிபர் ஆசாத்துக்கு ஆதரவாக ரஷ்ய ராணுவம் போரிட்டு வருகிறது. இதற்காக ரஷ்ய விமானப்படை வீரர்

23ஆம் பக்கம் பார்க்க....

## தன்னைத்தானே சுட்டு விட்டாரோ?

## ரவிராஜ் படுகொலை வழக்கு; தீர்ப்புமீது மனோ சலிப்பு

(கொழும்பு)

நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை பார்த்தால் ரவிராஜ் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு தன் காவலரையும் சுட்டுவிட்டாரோ என்று சலிப்

24ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ரவிராஜின் படுகொலைத் தீர்ப்பு; சர்வதேச விசாரணை தேவை!

தமிழ்மக்களுக்கு எதிரான இனப்படுகொலை, மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர் குற்றங்களை விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணையே தேவை என்பதை ரவிராஜ் படுகொலை சம்பவத்தின் தீர்ப்பு உணர்த்தியுள்ளதாக வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நீதித்துறையில் இருந்து தமிழ் மக்களுக்கு எந்தவொரு நீதியும் கிடைக்காது என்ற செய்தி இதன் மூலம் மீண்டும் மீண்டும் அழுத்தம் திருத்தமாக கூறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கில் இருந்து மூன்று கடற்படை புலனாய்வு அதிகாரிகள் உள்ளிட்ட சந்தேக நபர்களும் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் இந்த கருத்தை கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டதன் நிறைவை மிக உற்சாகமாக கொண்டாடவுள்ள நிலையில் சிங்கள பௌத்த பேரினவாதம் தெளிவான செய்தியை கூறியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரவிராஜின் படுகொலை மூலம் ஈழத தமிழர்களுக்கும் குடும்பத்தினருக்கும் இழைக்கப்பட்ட அநீதிக்கான தீர்வு வழங்கப்படாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக எம்.கே.சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார்.

இந்த கொலை தொடர்பில் எந்தவொரு குற்றவாளிகளையும் கண்டறிய தவறிய அரசாங்கம், அனைத்து சந்தேக நபர்களையும் தற்போது விடுவித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். (11)


## காணி விற்பனை

A9 வீதி நுணாவில் சந்திக்கு அருகே மட்டுவில் வீதியில் (200 M) துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 10 பரப்பு காணி பிரித்தும் கொடுக்கப்படும். (759)

**0778730129**


## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**இலக்கினேஸ்வரி நித்தியானந்தன்**

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி யசோதா குலரத்தினம் அவர்களின் அன்புத் தாயார் திருமதி இலக்கினேஸ்வரி நித்தியானந்தன்அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.


## விற்பனைக்கு

டாட்டா 709 மொடல் கன்ரர் விற்பனைக்குண்டு. (758)

தொடர்பு : 0774349269


## தாதிப் பயிற்சி

உதவித் தாதிப் பயிற்சிக்கு பெண் பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்.

0778730129


## 12-ம் ஆண்டு நினைவில்

**இராசரத்தினம் சகிதன்**




எம் வாழ்க்கையில் அம்மா,
அப்பா என்ற அன்புருவைக்
கொடுத்த அன்பு மகனே
சகிக்குட்டி !
வாழ்க்கை எனும் சோலையிலே
சிறகொடிந்த பறவையாய்
உம்மைப் பிரிந்து நாள்தோறும்
தவியாய் தவிக்கின்றோம்.
-மகனே உம் அன்பு மழலை
கேட்டு இருந்த நாட்களை திரும்ப
வராதோ என ஏங்கி துடிக்கிறோம்.
மார்கழி 26 என நினைக்கும்
போதே நெஞ்சம் வெடிக்குது.
எம் செல்லமே உம்மை
நினைக்கும் ஒவ்வொரு கணமும்
இதயத்துடிப்பே ஒரு கணம் துடிக்க
மறுக்கிறது.எம்மை தவிக்கவிட்டு
சென்று பன்னிரண்டு ஆண்டுகள்
ஆனாலும் ஒரு
நொடியேனும் உம்மை நினைக்க
நாம் மறப்பதில்லை
எம் அன்புச் செல்வமே!!

பிறப்பு : 28.03.2004
இறப்பு : 26.12.2004

உம் நினைவிலே என்றும் வாழும்...
அப்பா, அம்மா, தம்பிமார்

செல்வன் செல்லையா
பல்பொருள் வாணிபம்,
முல்லைத்தீவு. (S-701)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



(S-700)

தோற்றம் : 19.01.1937 - மறைவு : 26.11.2016

எமது குடும்பத் தலைவர்

அமரர் **கிட்டிணன் பொன்னையா**

கடந்த 26.11.2016 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கிட்டிணன் பொன்னையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 26.12.2016 திங்கட்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபீண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி வாயிலாகவும் இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும் எமது துன்ப வேளையில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கூவில்,
புலோலி தெற்கு,
புலோலி.

தகவல் : குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு : பிரேம்நாத் - 0773104419,
ரஜனிகாந் - 0776155422, கபிலன் - 0770858322

# இயற்கைப் பேரிடரால் உயிரிழந்த அனைவரையும் நினைவு கூருவோம்

## இன்று இரு நிமிட மௌன அஞ்சலிக்கு யாழ். அரசாங்க அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்த அனைத்து ஆத்மாக்களையும் தேசிய பாதுகாப்பு தினமான இன்றைய தினத்தில் நினைவுகூர்ந்து இரண்டுநிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு சுனாமிப்பேரலையினால் இலங்கை மற்றும் இந்து சமுத்திர கரையோரப்பகுதிகளில் பாரிய உயிரிழப்பு மற்றும் சொத்தழிவுகளையும் எதிர்நோக்கியிருந்தது.

இதன் விளைவாக கடந்த 31.05.2006 ஆம் திகதி அமைச்சரவையினால் ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பாக அனர்த்தங்களின் போது இறந்தவர்களை நினைவு கூரும் அதேவேளை எதிர்காலத்தில் அனர்த்த பாதிப்புக்களை குறைத்தல், தணித்தல்,தவிர்த்தல் போன்றவற்றை பலப்படுத்தும் நோக்கில் முன்னாயத்த நடவடிக்கைகள் விழிப்புணர்வுகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பமாகவுள்ளது. அத்துடன் இந் நினைவு கூறலானது கிராம, பிரதேச, மாவட்ட, தேசிய ரீதியில் ஓர் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பினை அனர்த்த ஆபத்து முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு உள்வாங்குவதற்கான ஓர் செயலாற்றுகையாகவுமுள்ளது.

எனவே இத்தேசிய பாதுகாப்பு தினத்தில் இன்று காலை 9.25 - 9.27 வரையான இரண்டுநிமிடங்கள் அனைவரும் மௌனமாக இருந்து அனர்த்தங்களின் போது இறந்தவர்களை நினைவு கூருவதுடன் சமயநிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து இறந்த ஆத்மாக்களின் சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரங்களை முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து மாவட்டத்தில் அனர்த்த மீட்சி திறனை கட்டியெழுப்புவதற்கு உறுதி எடுத்துக்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ஆழிப் பேரலை ஏற்பட்டு 12 ஆண்டுகள் நிறைவு

## அஞ்சலி, விசேட வழிபாடுகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரலை ஏற்பட்டுபன்னிரண்டாம்ஆண்டு நிறைவையொட்டி விசேட பூசைவழிபாடுகளும் அஞ்சலி நிகழ்வுகளும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 6.30 மணிக்கு புலோலி சூசையப்பர் ஆலயத்தில் யாவீஸ் அடிகளினால் விசேட பூசை வழிபாடும் நடத்தப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.பின்னர் அங்குள்ளநினைவிடத்தில்உறவினர் அஞ்சலி செலுத்துவர்.

காலை 7 மணிக்கு மணற்காடுதேவாலயத்தில்முன்னாள் பங்கு தந்தை ஜேம்ஸ் நாதன் அடிகளார் தலைமையில் வழிபாடுகள் நடைபெற்று திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதன் பின்னர் பொது நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். பின்னர் சவக்காலப்பிட்டியில் உறவுகள் அஞ்சலி செலுத்துவர்.

காலை 9 மணியளவில் கடற்றொழில் சங்கத்தின் ஏற்பாட்டில்உடுத்துறையில்உள்ள நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். பின்னர் உறவுகள் தமது நினைவிடங்களில் அஞ்சலி செலுத்துவர்.

இதேபோன்று கட்டைக்காடு , தாளையடி, செம்பியன்பற்று போன்ற இடங்களில் அடக்கம் செய்யப்பட்ட இடங்களிலும் உறவினர்கள் அஞ்சலி செலுத்துவர். ஆலயங்களில் சுனாமி ஏற்பட்ட 9.26 இற்கு பூஜைவழிபாடுகள் நடைபெறவுள்ளன. (இ-60,64)

# யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான அமெரிக்காவின் தீர்மானம் பெப்ரவரியில்

(கொழும்பு)

**ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமெரிக்காவின் புதிய அரசாங்கத்தின் தீர்மானம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் அறிவிக்கப்படவுள்ளது.**

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள இந்த குற்றப்பிரேரணையை நீக்கிக் கொள்வதற்கான அதிகாரம் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ட்ரம்பின் கையில் உள்ளதாகவும் குறிப்பிடப் படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த யோசனையை வாபஸ் பெறுமாறு ட்ரம்பிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# எம்.பிக்களின் வாகனங்களை அடையாளம் காண விசேட வாகன அடையாள அட்டை

பாராளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களை அடையாளம் கண்டு கொள்வதற்கு முடியுமான புதுவகை வாகன அடையாள அட்டை ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வாகனத்தில் பயணிப்பது, குறித்த பாராளுமன்ற உறுப்பினர் தான் என்பதை அடையாளம்கண்டுகொள்ள முடியுமான வகையில் இந்த அடையாள அட்டை அமையப்பெறவுள்ளது.

இந்த அடையாள அட்டையில், குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் புகைப்படம், அடையாள அரச முத்திரை என்பன இடம்பெறவுள்ளன.

இரவு நேரத்திலும் தெளிவாக இனங்காணக் கூடிய முறையில் இவ்வடையாள அட்டை விசேட வர்ணத்தில் வடிவமைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. பாராளுமன்ற உறுப்பினர்கள் பயணிக்கும் போது மாத்திரமே இந்த அடையாள அட்டைகள் வாகனங்களில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு இரு அடையாள அட்டைகளை வழங்க சபா நாயகர் கரு ஜயசூரிய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

# அரசாங்கத்திலிருந்து விலகுங்கள் அமைச்சர்களுக்கு பகிரங்க சவால்

நாட்டையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் ஒரே விதமாக நேசிப்பவர்களாக இருந்தால், உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்படும் முன்னர் கலப்பு அரசாங்கத்தில் இருந்து விலகிக் காட்டுமாறு கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க சவால் விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் ஒன்றை அமைக்க போவதாக வாயில் கிழங்கு நடாமல், அதனை செயலில் ஒப்புவித்து காட்ட அவர்களுக்கு இன்னும் சந்தர்ப்பம் இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார். நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையை தெளிவு படுத்தும் நோக்கில் மினுவாங்கொடை பிரதேசத்தில் நேற்று முன்தினம்நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-3)

# நத்தார் காலத்தில் 254 பேர் காயம்

(கொழும்பு)

நத்தார் பண்டிகைக் காலப்பகுதியில் 254 பேர் விபத்துக்குள்ளாகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டு விபத்துக்களின் எண்ணிக்கை 13 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக தேசிய வைத்தியசாலையின் இணைப்பாளர் புஸ்பா ரம்யானி டி சொய்சா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் சனிக்கிழமை நள்ளிரவு வரையிலான 24 மணித்தியால காலப்பகுதியில் மொத்தமாக 254 பேர் விபத்துக்குள்ளாகி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டுள்ளனர்.

வீதி விபத்துக்கள் மற்றும் உள்ளக விபத்துக்களினால் அதிகளவானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவங்களில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த ஆண்டு வன்முறைச் சம்பவங்களினால் காயம் ஏற்பட்டவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக டி சொய்சா தெரிவித்துள்ளார். (இ-3)

## வட மாகாண சுற்றாடல் அமைச்சின்

# இயற்கைப் பேரிடர் தணிப்புத்தின நிகழ்ச்சி இன்று முல்லைத்தீவில்

வடமாகாண சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் இயற்கைப் பேரிடர் தணிப்புத்தின நிகழ்ச்சி இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. செம்மலை மகா வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாக உள்ள இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வடமாகாண சுற்றாடல்அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.சிவமோகன், சாந்திசிறீஸ்கந்தராசா, வடமாகாணசபை பிரதிஅவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வடமாகாணசபை உறுப்பினர்கள் ஆ.சி.து.ரவிகரன், க.சிவநேசன், யாசீன் ஜவாஹிர், ஆ.புவனேஸ்வரன், அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதன்போது 'அனர்த்த முன்னெச்சிக்கை நடவடிக்கைகளில் தமிழர்களின் பாரம்பரிய அறிவு என்ற கருப்பொருளில் யாழ். பல்கலைக்கழகப் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நா. பிரதீபராஜாவின் விசேட உரை இடம்பெறவுள்ளதோடு, யாழ். ராகஸ்வரம் இசை மன்றத்தால் பேரிடர்கள் தொடர்பான விழிப்புணர்வை ஊட்டும் 'இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்' என்ற நாடக அரங்கமும் நடைபெறும்.

இலங்கையின் கரையோர மாவட்டங்களை 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி கடற்கோள் தாக்கியதில் நாற்பதாயிரம் வரையான உயிர்கள் பலியாகியதோடு, பெரும் சொத்தழிவுகளும் ஏற்பட்டன.

கடற்கோள் தாக்கிய தினமான டிசெம்பர் 26 ஆம் திகதி வடமாகாண இயற்கைப்பேரிடர் தணிப்புத்தினமாக வடமாகாண சபையால் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து, ஆண்டு தோறும் வடமாகாண சுற்றாடல் அமைச்சு இதற்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகின்றது. கடந்த ஆண்டு இயற்கைப் பேரிடர் தணிப்புத் தின நிகழ்ச்சி கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மீண்டும் அரசியலில் திஸ்ஸ அத்தநாயக்க



செயற்பாட்டு ரீதியான அரசியலில் தான் மீண்டும் ஈடுபட உள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மக்களின் கோரிக்கைக்கு அமைய எடுக்கப்படும் அரசியல் தீர்மானத்தை விரைவில் அறிவிக்கவுள்ளதாகவும் அத்தநாயக்க தெரிவித்தார்.

திஸ்ஸ அத்தநாயக்க, முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இணைய போவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பெயரளவு தலைவராக ஜீ.எல்.பீரிஸ் இருந்த போதிலும் அதன் உண்மையான தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# தென்னாபிரிக்காவை வீழ்த்துவது சுலபமல்ல முயன்றால் வெற்றிபெறலாம் - மத்யூஸ்




இலங்கை அணியின் முன்னணி வீரர்களாக திகழ்ந்தவர்கள் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன மற்றும் டில்ஷான். இவர்கள் ஓய்விற்குப் பின் அந்த அணியில் அனுபவ வீரர்கள் யாரும் இல்லை.

இந்நிலையில், புதுமுக வீரர்களுடன் பலம் வாய்ந்த தென்னாபிரிக்காவை சந்திக்க, அந்த அணியின் சொந்த மண்ணுக்கு சென்றுள்ளது இலங்கை அணி. இன்று முதல் டெஸ்ட் போர்ட் எலிசபெத்தில் தொடங்குகிறது.

இந்த போட்டி குறித்து இலங்கை அணியின் தலைவர் மத்யூஸ் கூறுகையில் "சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன மற்றும் டில்ஷான் ஆகியோர் அணியில் இருந்து ஓய்வு பெற்ற பொழுது, அவர்கள் இடம் வெற்றிடமாகத்தான் இருந்தது.

ஆனால், இளம் வீரர்கள் அவர்கள் இடத்தை நிரப்பி சிறப்பாக செயற்படுகிறார்கள்.

அவுஸ்திரேலியாவிற்கு எதிரான தொடரில் குசல் மெண்டிஸ் மற்றும் தனஞ்ஜெயா டி சில்வா போன்ற இளம வீரர்கள் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

அவர்கள் அணியில் இருப்பதை பார்க்க சிறப்பாக இருக்கிறது. அவுஸ்திரேலியாவிற்கு எதிராக தென்னாபிரிக்கா அணி மிகவும் சிறப்பாக விளையாடியது. அவுஸ்திரேலிய மண்ணில் அவர்களை வீழ்த்தியது எளிதான காரியம் அல்ல. நம்முடைய திறமையை சிறப்பான வகையில் வெளிப்படுத்தினால், கடந்த காலங்களில் பெற்றதுபோல் வெற்றிகளை பெற முடியும் என்றார்.

# என் உயிருக்கு ஆபத்துள்ளது தென்னாபிரிக்க வீரர் தெரிவிப்பு




தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி வீரர் அஸ்விரோ பீட்டர்சன் டெஸ்ட் போட்டியில் தொடக்க வீரராக களம் இறங்கிய அவர் உள்ளூர் போட்டியின் போது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக புகார் எழுந்தது.

இதுபற்றி விசாரித்த தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரியம், அஸ்விரோ பீட்டர்சன் மேட்ச் பிக்சில் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று உறுதி செய்து அவருக்கு 2 ஆண்டு தடை விதித்தது.

இந்த நிலையில் சூதாட்ட கும்பலால் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக பீட்டர்சன் தெரிவித்து உள்ளார்.

கிரிக்கெட்டில் நடைபெறும் சூதாட்டத்தை கிரிமினல் கும்பல் செய்து வருவதை அறிவேன். இதனால் எனது உயிருக்கும் என் குடும்பத்தினரின் உயிருக்கும் ஆபத்து இருப்பதாக பயப்படுகிறேன்.

ஆனால் பாதுகாவலர்களை நியமிக்க இருக்கிறேன் என்றார். பீட்டர்சனுக்கு 2018ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி வரை தடை அமுலில் இருக்கும். அவர் சர்வதேச, உள்ளூர் போட்டிகள் எதிலும் விளையாட முடியாது.

# பங்களாதேஷ் டெஸ்ட் தொடர்; போல்ட், சவுத்தி ஆகியோருக்கு ஓய்வு

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி தலா மூன்று ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக நியூசிலாந்து சென்றுள்ளது. பாக்சிங் டே அன்று ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெறுகிறது. இந்த போட்டியில் நியூசிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்கள் டிம் சவுத்தி மற்றும் ட்ரென்ட் போல்ட் ஆகியோருக்கு ஓய்வு கொடுக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

பங்களாதேஷ் தொடருக்குப்பின் நியூசிலாந்து அணி தொடர்ந்து டெஸ்ட் போட்டியில் விளையாட இருக்கிறது. குறிப்பாக மார்ச் மாதத்தில் தென்னாபிரிக்காவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் சிறப்பாக விளையாடுவதற்காக ஓய்வு அளிக்கப்படலாம் என்று அந்த அணியின் பயிற்சியாளர் மைக் ஹெசன் கூறியுள்ளார்.

மேலும், இதுகுறித்து ஹெசன் கூறுகையில்,இந்த முடிவு ஏற்கனவே உள்ளது போல் மூன்று வகை கிரிக்கெட்டிலும் சம அளவு வீரர்களுடன் விளையாட வேண்டும் என்பதன் அடிப்படையில் எடுத்ததுதான். டெஸ்ட் போட்டி தொடருக்கு தயாராகும் வகையில், அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க உள்ளோம்" என்றார்.

போல்ட் இரண்டு தொடரிலும், சவுத்தி இருபது-20 தொடரிலும் பங்கேற்க மாட்டார்கள் என்று தெரிகிறது.

# டோனியை மறந்த அஸ்வின் ரசிகர்கள் பெரும் கவலை



2016-ம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் விருதுக்கு சென்னையை சேர்ந்த ஆர்.அஸ்வின் தேர்வு செய்துள்ளார்.

ஆண்டின் சிறந்த வீரர், மற்றும் டெஸ்டின் சிறந்த வீரர் ஆகிய இரட்டை ஐ.சி.சி. விருது அவருக்கு வழங்கப்பட்டது.

ஐ.சி.சி. விருது கிடைத்தது தனக்கு மிகுந்த பெருமை அளித்தது என்று அஸ்வின் குறிப்பிட்டார். தனது மனைவி, பெற்றோர், பயிற்சியாளர்கள் கும்ப்ளே, சங்கர் பாசு, டெஸ்ட் தலைவர் விராட்கோலி ஆகியோருக்கு அஸ்வின் நன்றி தெரிவித்து அவர்களது பெயரை குறிப்பிட்டார்.

ஆனால் ஒருநாள் மற்றும் 20 ஓவர் தலைவரான டோனி பெயரை அஸ்வின் குறிப்பிடவில்லை.

டோனியின் பெயரை மறந்து அவர் குறிப்பிடாமல் விட்டது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தி உள்ளனர். அஸ்வினின் வளர்ச்சிக்கு டோனி பெரும் பங்கு வகித்து உள்ளார். ஐ.பி.எல். போட்டியில் சென்னை சுப்பர் கிங்சிடம், இந்திய அணியிலும் அஸ்வினை முன்னேற்றப் பாதைக்கு அழைத்து கொண்டு சென்றவர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது.


## கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் - யாழ்க்கிளை
11, கஸ்தூரியார் வீதி 1ஆவது ஒழுங்கை
யாழ்ப்பாணம்

### கலைவகுப்புகளுக்கான மாணவர் அனுமதி - 2017

மேற்படி கலாமன்றத்தில் நடைபெற்று வரும் கலை வகுப்புகளுக்கு புதிய மாணவர்களை இணைப்பதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. ஆர்வமுள்ள மாணவர்கள் இணைந்து கொள்ள முடியும்.

### நடைபெறும் கலை வகுப்புக்கள்

அறநெறி
பண்ணிசை
- சங்கீதம்
நடனம்
மிருதங்கம்
வயலின்

சித்திரம்
நாடகமும் அரங்கியலும்
யோகாசனம்
மாலை கட்டுதல்
கோலம் போடுதல்
தோரணம் செய்தல்

அனுமதி முடிவு திகதி - 05.01.2017
குறிப்பு :- அனுமதி முடிவு திகதிக்கு பின் எவரும் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டார்கள்

இல.11,கஸ்தூரியார் வீதி,
1ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உதயன் பணிமனை அருகிலுள்ள ஒழுங்கை)

- பதிவாளர் (C-7003)


## இலங்கை- தெ.ஆபிரிக்கா டெஸ்ட் இன்று ஆரம்பம்

தென் ஆப்பிரிக்கா, இலங்கை அணிகள் மோதும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று போர்ட் எலிசபெத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி 3 டெஸ்ட், மூன்று 20 ஓவர் ஆட்டம் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக தென்னாப்பிரிக்கா சென்றுள்ளது.

இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போர்ட் எலிசபெத்தில் இன்று கோலாகலமாக தொடங்குகிறது.

சொந்த மண்ணில் விளையாடுவதால் தென்னாபிரிக்கா இந்த டெஸ்ட் தொடரை எளிதில் கைப்பற்றும். இலங்கை அணிக்கு இந்த டெஸ்ட் தொடர் சவாலாக இருக்கும். இரு அணிகள் இதுவரை 22 டெஸ்டில் மோதியுள்ளன.

இதில் தென்னாபிரிக்கா 11 டெஸ்டிலும் இலங்கை 5 டெஸ்டிலும் வெற்றிபெற்றுள்ளன. 6 டெஸ்ட் போட்டிகள் சமநிலையானது. (க)

# பஞ்சாப் அணியின் பயிற்சியாளர் ஆகிறார் அதிரடி மன்னன் விரேந்திர ஷேவாக்




சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற அதிரடி வீரரான ஷேவாக் பயிற்சியாளராக அவதாரம் எடுக்க உள்ளார்.

ஐ.பி.எல்.தொடரில் பஞ்சாப் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்தவர் சஞ்சய் பங்கர்.

அவர் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

பஞ்சாப் அணியின் சக உரிமையாளர் ப்ரீத்தி ஜிந்தாவுடன் ஏற்பட்ட மோதலே இதற்கு காரணம் என்று கூறப்பட்டது.

சஞ்சய் பங்கர் கூறுகையில், பஞ்சாப் அணிக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை.

இதனால் அடுத்த கட்டத்தை நோக்கி நகர வேண்டிய நிலையில் இருப்பதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் கடந்த 2 ஆண்டுகளாக பஞ்சாப் அணியின் ஆலோசகராக இருந்து வரும் ஷேவாக் அந்த அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது.

# ஆழிப்பேரலை அனர்த்த தினத்தை அனைவரும் நினைவு கூருவோம்!

## டக்ளஸ் தேவானந்தா அழைப்பு



ஆழிப்பேரலை நிகழ்ந்து 12 வருடங்கள் கழிந்துள்ள நிலையில், அதனை நினைவு கூர்ந்து இரண்டு நிமிட நேர மௌனத்தினூடாக இறந்த மக்களுக்கு எமது அஞ்சலியினைத் தெரிவிப்போமாக என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், 2004ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி இந்தோனேசியாவை அண்மித்த கடற்பரப்பில் பூகம்பம் ஒன்று ஏற்பட்டு சுமார் 3 மணி நேரம் கழிந்த நிலையில் சுனாமி பேரலைத் தாக்கம் இலங்கையை வந்தடைந்தது. ஒரு மணி நேரத்திற்கு சுமார் 1000 கிலோ மீற்றர் வேகத்தில் மேலெழுந்திருந்த பேரலைகள் காலை 8.05க்கு இலங்கையில் முதலில் காரை நகர் பகுதியைத் தாக்கியது. பின்னர் காலியில் சுமார் 7000 மக்களைக்காவு கொண்டதுடன், ஹிக்கடுவ பகுதியில் புகையிரதத்தில் பயணஞ் செய்திருந்த சுமார் 3000 மக்களையும் பலியெடுத்து, எமது நாட்டில் வடக்கு, கிழக்கு என பாரிய உயிரிழப்புக்களை ஏற்படுத்தியதுடன், சொத்துக்கள் பலவும் அழிக்கப்பட்டன.

உலகளாவிய ரீதியில் நிகழ்ந்த மிகவும் கோரமான சுனாமி அனர்த்தமானது, ஏற்கனவே யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த எமது வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கு மேலதிகமான பாதிப்பினையே உண்டு பண்ணியிருந்தது.

அந்த வகையில், சுனாமி காரணமாக வடக்கில் மிக அதிகமான உயிரிழப்புக்களுக்கு உடுத்துறை பகுதி முகங் கொடுத்திருந்தது. சுனாமியால் உயிரிழந்த மக்களது 1084 கல்லறைகள் காணப்படுகின்ற இப் பகுதியில் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னரான முதலாவது நினைவேந்தல் நிகழ்வினை நாம் கொல்லப்பட்ட அந்த மக்களின் உறவுகளுடன் முன்னெடுத்திருந்தோம். பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டில் அப்பகுதி இருந்த நிலையில் இந்த நினைவேந்தலை மேற்கொள்வதற்கும், பின்னர் அப்பகுதி உட்பட வடமராட்சிக் கிழக்கில் 80 வீதமான எமது மக்களின் நிலங்களை விடுவித்து, அவற்றை எமது மக்களிடம் கையளிக்கவும் எம்மால் இயலுமாயிற்று.

மேலும், அப்பகுதியில் கடல்நீர் உட்புகும் பாதைகளின் பாதுகாப்பு தொடர்பிலும் அண்மையில் நாம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அவதானத்துக்கு கொண்டு வந்துள்ளோம்.

எனவே, வருடந்தோறும் நாம் சுனாமி நினைவு தினத்தை நினைவு கூர்ந்து கொல்லப்பட்ட எமது உறவுகளுக்கு ஆத்ம சாந்தி வேண்டுவதுடன், இனியும் அவ்வாறானதொரு பாதிப்பு ஏற்படாத வகையில் எமது சுற்றுச் சூழலைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-3)


### பகுதிநேர சேவை வெற்றிடம்

தினசரி காலை வேளை 4 மணித்தியாலங்கள் வாரத்தில் 6 நாட்கள் யாழ். நகர் அலுவலகமொன்றில் இருந்தபடி மக்கள் சேவையில் ஈடுபடக்கூடிய தொண்டர்கள் இருவர் தேவை. ஊக்குவிப்பு பணமாகச் சிறுதொகை வழங்கப்படும். பெண்களுக்கும் ஓய்வுபெற்றோர்க்கும் முன்னுரிமை. (7146)

077 055 3143 அல்லது 077 614 6556


# ஆட்டோ-ஹன்டர் விபத்து



ஆட்டோ ஒன்றுடன் ஹன்டர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் ஆட்டோ பலத்த சேதமடைந்தது. நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் வீதியில் உள்ள விழுந்த ஆலடி எனும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. யாழில் இருந்து கரவெட்டி நோக்கி வந்த ஆட்டோவுடன் எதிரே வந்த ஹன்டர் வாகனம் உரசியதாகவும் இதனால் ஆட்டோ பலத்த சேதமடைந்ததுடன் அதில் பயணித்த மூவர் சிறிய காயங்களுடன் தப்பினர்.

(இ-60)

# மரண அறிவித்தல்

## திரு. தம்பிப்பிள்ளை காசிநாதன்

(ஓய்வுபெற்ற பிரதிப் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

Former- Deputy Registrar University Of Jaffna)



சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை காசிநாதன் 22.12.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை – அன்னம்மா தம்பதியினரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு– நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவசோதியின் பாசமிகு கணவரும் சுசீலன், கிருஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயகுமார் (ஆசிரியர்), தர்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கமோந்தி, சிவசங்கர், சகாரன் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவதாசன், சிவநேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (26.12.2016) இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

தேவசகாயம் ஜெயகுமார்- மருமகன்

(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

(முன்னாள் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

சுதுமலை தெற்கு, மானிப்பாய்

(வ-6339)

# இராசி பலன்

26.12.2016

(மார்கழி 11, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு

துவாதசி காலை 7.33 மணிவரை

அனுசம் முழுவதும்

சுபநேரம் 12.27-1.57 மணிவரை

இராகுகாலம் 7.57-9.27 மணிவரை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி | | |
| சுக் | | | ராகு |
| சூரி | சனி சந். புதன் | | குரு |

**மீனம்:** தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், ஆன்றோரின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மேடம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காணவேண்டிய நாள், எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், எடுத்த கருமங்கள் கைகூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** தாழ்ந்த சுபரவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள்; போசன சுகமுண்டு.

**சிம்மம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், வாகன சுகமுண்டு.

**தனுசு:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, ஆன்மீக நாட்டம் கூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்:** எடுத்த காரியங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, சுப செலவுகள் கூடும் நாள்.

**கன்னி:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

வள்ளுவன்

# ஊழிக் கூத்தாடிய ஆழிப்பேரலை...



கடல்தாயே நினைவிருக்கிறதா?
எம்உறவுகளை உன்னுடன் அள்ளிச்
சென்று இன்றுடன் பத்து வருடங்கள்
கடந்துவிட்டன. எப்படி நீ அதை மறப்பாய்.
ஏனென்றால், நீ அள்ளிச் சென்ற அத்தனை
உறவுகளும் உன்மடியில்
விளையாடியவர்கள் தானே?
வெயிலோ, மழையோ, குளிரோ, புயலோ
உன்னை நம்பி நாடிவந்த உறவுகளை
ஊருடனேயே அள்ளி விழுங்கி ஏப்பம்விடும்
அளவுக்கு நாம் என்ன பிழை செய்துவிட்டோம்.
"சிறுநண்டு மணல் மீது படமொன்று
கீறும். சிலவேளை அதைவந்து
கடல்கொண்டு போகும்..."
என்று சின்னச்சிட்டுக்கள் அத்தனையும்
உன்னருகில் உன் நுரை அள்ளி
ஆளுக்காள் அப்பி விளையாடிய போதெல்லாம்
சிறிதேனும் கோபப்படாமல்
சிரித்துக்கொண்டிருப்பாயே அலையால்
தாலாட்டியபடி.
வானிலை அறிக்கை வாசிக்கப்படும்
மீனவர் கடலில் இறங்க வேண்டாமென.
இருப்பினும் நாம் புறப்படுவோம்.
கட்டு மரம்தனை தள்ளி பாயை விரித்து
உன்னில் பயணிக்க தாயாய் எமைக்கரை
சேர்ப்பாயே மறந்துவிட்டாயா?
கருமேகம் சூழ்ந்து கடலே ஊரை விழுங்
குவதுபோல உருமறைப்பாய்.
அப்போதெல்லாம் எம்பிள்ளைகள்
உன் அழகை ரசித்துக்கொண்டே கரையில்
நண்டுபிடித்து களிப்புறுவர்.
நீ அவர்களை அடித்ததில்லையே?
பாடசாலை முடிந்தவுடன் பிள்ளைகள்
வீடுவருவார்களோ, இல்லையோ முதலில்
வந்து உன்னில் நீச்சலடித்து பழகிய
போதெல்லாம் மெல்லிய அலையால்
அவர்களை மிதந்தி நீச்சல் கற்பிக்கும்
ஆசிரியராயிருந்தாயே? எப்படி உன்னால்
இப்படி விஸ்வரூபம் எடுக்க முடிந்தது?
நாம் செய்யாத குற்றத்தை
செய்துவிட்டதாய் யார் சொன்னாலும்
உன்மீதுதானே சத்தியம் செய்வோம்.
உன்மீது யாரும் பொய்ச்சத்தியம்
செய்தால் எம் இதயம் நொருங்கிவிடும்.
ஏனென்றால், உன்னையும் எங்களையும்
பிரிந்துவிட முடியாதபடி எம் உணர்வுகளில்
பின்னிப் பிணைந்திருந்தாய். ஆனால்
அந்த உறவுப் பின்னல்களையெல்லாம்
உடைத்தெறிந்து, எம் உறவுகளையும்
உடைத்தெறிந்துவிட்டு மீண்டும் நீ
அமைதியானதை எம்மால்
ஜீரணித்துக்கொள்ள முடியவில்லையம்மா!
கடலம்மா! கடலம்மா! என்று
உப்புக்காற்றைக் கிழிக்குமளவிற்கு
கத்திக்கத்தி உன்னை அழைப்போமே.
அப்போதெல்லாம் எம்முடன் எம்மில்
ஒருவராய் இருக்கிறாய் என்றல்லவா நினைத்திருந்தோம்.









எம் உறவுகள் அத்தனையையும் நீ விழுங்கிவிட்டு மௌனமாய் இருந்தபோதும்கூட உன்னிடம் வந்து தஞ்சமடைந்தோமே. தாயைவிட்டு எப்படி சேய்கள் வாழும். நீதானே எங்கள் அத்தனைக்கும் சொந்தக்காரி. நீ எங்களை எட்டி உதைத்தாலும் உன்னை விட்டு எம்மால் எப்படி இருந்திட முடியும். ஏனென்றால் நீ எம் அம்மா அல்லது அன்பு என்பதால். எம் வாழ்வில் இருந்து வாழ்வாதாரம் அத்தனையிலும் நீ என்று உன்னை எம் உயிரினில் வைத்திருக்க நீயோ எம் ஊரில் ஒரு பூண்டைக்கூட விட்டுவைக்காமல் பிடுங்கி எடுத்துவிட்டாய். இருந்தும் என் செய்ய? உன்னை விட்டால் எமக்கு யாரம்மா என அத்தனையும் மறந்து மீண்டும் உன்னிடத்தே அடைக்கலமாகிவிட்டோம். ஆனாலும் எம் அத்தனை உறவுகளின் நினைவுகள் நீங்கா வடுக்களாய் எம் நெஞ்சில் நிலைத்துவிட்டன.

எது எப்படியோ எம் உறவுகள் அத்தனையும் உன்னில் வாழ்கிறார் எனும் நினைவு எம்மில் இருந்து வரும் பெருமூச்சின் வெப்பத்தை ஓரளவு தணித்துக்கொள்கிறது.

அம்மா! உன்னிடம் உன் பிள்ளைகள் மீண்டும் மீண்டும் இரந்து கேட்கிறோம். இன்னொருமுறை நீ இப்படி கோரத் தாண்டவமாடிவிடாதே. ஏனென்றால், இத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் எம்மில் இருந்து இழக்கக்கூடாத அனைத்தையும் இழந்து புழுவாய்த் துடித்து இப்போதே அந்த ரணங்களில் இருந்து மீண்டெழுந்து கொண்டிருக்கின்றோம். பட்டமரங்களின் நிழலிலே விதைக்கப்பட்ட விதைகளை முளைக்கவிடு. அவை விருட்சமாகி விழுதுவிடட்டும். இது உன்னை தாயாக நினைக்கும் ஒரு தனையனின் ஆத்மார்த்த குரல்.

-மாவை. நா. கஜேந்திரன்-

26.12.2004 இல்
ஆழிப்பேரலையில்
அள்ளுண்டு போன
எம் உறவுகளின்
12 ஆவது
ஆண்டு
நினைவுதினம்
இன்று


## ஆறாத ரணம் ஆறிடுமோ?


வாழ்வை கொடுத்த நீ– எமை
வாழா வெட்டியாக்குவாய் என
நாம் சொப்பனமும் கண்டதில்லை
கரை வந்து கால் நனைத்து -நாம்
விளையாடிய போதெல்லாம்
கடலே நீ... காளியாவாய் என
கண நேரமும் நினைத்ததில்லை
வாரிக் கொடுத்த நீ வாரிச் சுருட்டிய செய்தி
எம் வாசல் வந்த போதே
எம் சிந்தை உறைத்தது
ஆயிரம் ஆண்டுகளில் ஆறாத ரணம்
ஆண்டு பத்தில் நீங்குமோ
எம் சிந்தனையில் நின்று

-அநாதை-

# தெற்காசியாவை உலுக்கிய சுனாமி







இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் டிசெம்பர் 26 ஆம் திகதி என்பது நாட்டின் கரையோரத்தில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களைக் கதறியழ வைத்து கிலிகொள்ளச் செய்த ஒரு நாளாகும்.

"சுனாமி" - இது கரையோர மக்களைக் கதிகலக்கி, கண்ணீர் மல்க வைத்த ஒரு சொல். இந்த ஜப்பானியச் சொல்லின் அர்த்தம் இப்போது இலங்கையர்களுக்கு, அதிலும் குறிப்பாக கரையோரப் பகுதி மக்களுக்கு நன்கு பரிச்சயமான ஒன்றாகி விட்டிருக்கிறது.

கடந்த 2004 டிசெம்பரில் ஏற்பட்ட உயிரிழப்புக்களும் பொருளாதார அழிவுகளும் அந்தப் பாதிப்புக்களிலிருந்து இன்று வரை முழுமையாக மீள முடியாமலே ஒரு சில குடும்பங்கள் காலங்கழிக்கின்றன.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி இந்தோனேசியாவில் ஏற்பட்ட 8.9 றிச்டர் அளவிலான பூகம்பத்தினால் இந்தோனேசியாவின் ஆச்சேயில் மாத்திரம் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் பேரும் இலங்கை இந்தியா உட்பட பிற அண்டை நாடுகளில் இரண்டு இலட்சத்து ஜம்பதினாயிரம் பேரும் வெறும் மூன்றே நிமிட நேர சுனாமிப் பேரலையால் கொல்லப்பட்டிருந்தார்கள்.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி காலை 8.20 மணியளவில் கடலை விட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் அதிவேகமாக மேலெழுந்த பேரலைகள் ஒரு சில நிமிடங்களில் கரையைக் கடந்து ஊருக்குள் ஊடுருவியிருந்தது.

இதனால், உழைப்பிடங்களாகவும் உறைவிடங்களாகவும் உல்லாசபுரிகளாகவும் ஓய்விடங்களாகவும் எழில் கொஞ்சும் தாங்கக் கடற்கரைகளாகவும் திகழ்ந்த இடங்களெல்லாம் ஒரு சில நிமிட நேரத்தில் நிசப்த மயானங்களாக மாறிவிட்டிருந்தன.

சுமார் ஐந்து நிமிட நேரத்திற்கும் குறைவான சுனாமித் தாக்கம் நம் நாட்டில் அரை இலட்சத்துக்கும் சற்றுக் குறைவானோரின் வாழ்வை அழித்து விட்டுப் போனது.

அநேகரை அநாதைகளாகவும் ஆயிரமாயிரம் பேரை தங்களது இருப்பிடங்களிலிருந்து வெருண்டோடச் செய்து அகதிகளாகவும் ஆக்கிவிட்டிருந்தது.

எப்படியோ இன்றோடு 12 வருடங்கள் கழிந்துவிட்ட தற்போதைய நிலையில் சுனாமி ஏற்படுத்திய பேரழிவுத் தாக்கங்களிலிருந்தும் மனப்பாதிப்புகளிலிருந்தும் மக்கள் மீட்சி பெற முடிந்திருக்கிறது என்று பொதுவாகத் திருப்திப்பட்டாலும், சிலருக்கு இன்னமும் சுனாமி விட்டுச் சென்ற மாறாத தடங்கள் ஆறாத ரணங்களாகவே உள்ளன.



சுனாமி இன, மத, பேதம் பார்த்துத் தாக்கவில்லை. வற்றாத அருட்கடலை தமது வாழ்வாதாரத்திற்காக நம்பிக் கரையில் வாழ்ந்த அனைத்து இன மீனவர் சமுதாயத்தையும் சுனாமி அழித்து விட்டுப் போனது.

கடல் அலை என்பது தாலாட்டு இசை என்றே நம்மில் பெரும்பாலானோர் நினைத்தும் அதை அனுபவித்து மகிழ்ந்துமிருந்தனர்.

ஆனால், முழு உலகையும் உலுக்கி அசைத்துப் பார்க்கும் துன்பியல் ஒலியாக பூகம்பமும் அதனால் உண்டாகும் பேரலைகளும் மாறாமல் வரலாற்று மனத் திரையில் பதிந்து விட்டிருக்கின்றன.


எவ்வாறாயினும் வாழ்வதற்குத் தோதாகவுள்ள இந்த ஒரேயொரு பூமிப்பந்தில் இயற்கையின் நியதிகளுக்கு இணங்கித்தான் வாழ வேண்டும் என்ற யதார்த்தத்தையும் உணர வேண்டிய தேவைப்பாடும் உள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டோரைப்போல சுனாமியால் பாதிக்கப்பட்டோரும் 12 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இன்னமும் அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது நமது நாட்டின் "ஒருநாடு பல நீதி" என்ற வெறுப்புக் கலந்த கொள்கைகளையிட்டு மனம் வருந்த வேண்டியுள்ளது.

இப்படியாக கசப்பும் கவலையும் நிறைந்ததாக கடற்பேரலைத் தாக்கத்திற்குள்ளான கரையோர சமுதாய மக்களின் வாழ்வு கரைந்து கொண்டிருக்கின்றது.

குறிப்பாக் திஸ்ஸ மஹாராம கிரிந்த என்ற இடத்தில் 2004 இல் சுனாமி கரையொதுக்கிய "வெலிகொவுவா கொழும்ப"என்ற கப்பலைப் படத்தில் காண்கிறீர்கள். கடலிலிருந்து சுமார் 500 மீற்றர்களுக்கப்பால் தரையில் சுமார் 30 அடி உயரத்தில் இந்தக் கப்பல் சுனாமி அலையால் லாவகமாக அள்ளிச் செல்லப்பட்டு தரையில் போடப்பட்டிருந்தது.

சுமார் ஆறு மாதங்களாக எடுத்த பெரு முயற்சியின் பயனாக பாரிய அகழி ஒன்றை வெட்டி கரைக்குள் கடலை உள்ளொடுத்து கப்பலை மீண்டும் கடலுக்குள் அனுப்ப முடிந்தது. இயற்கை என்றால் என்ன அவ்வளவு இளக்காரமா என்பதற்கு இதுவும் ஒரு சாட்சி.






ஏ.எச்.ஏ.ஹுஸைன் அப்துல்





இயேசு பாலனின் பிறப்பை குறிக்கும் நத்தார் பண்டிகைக்கான நேற்று நள்ளிரவு ஆராதனைகள் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மிக சிறப்பாக இடம் பெற்றது.மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் நேற்று நள்ளிரவு திருநாள் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். இதன் போது பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்கர்கள் திருநாள் திருப்பலியில் பங்கெடுத்திருந்தனர்.

# ஆசிரியர் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாக உருமாற்றம்; மாணவ சமுதாயம் நெருக்கடியை எதிர்கொள்ளும் அபாய நிலை

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டமானது 2017 ஆம் கல்வியாண்டில் பாரிய சவால்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை காணப்படுகின்றது என வலயக்கல்விப்பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார்.

கிளிநெச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள 104 பாடசாலைகளில் சுமார் 32 ஆயிரத்து 55 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் புதிய கல்வியாண்டில் கல்வியை தொடரவுள்ளனர்.

இந்நிலையில் ஆசிரியர் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாகவுள்ளது. இவ்விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த வலயக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேல் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 2017 ஆம் ஆண்டில் கல்வியை தொடர்வதில் மாணவர்கள் பெரும் சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொள்ளும் அபாய நிலை காணப்படுகின்றது.

அதாவது விஞ்ஞானம், கணிதம்,ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டு ஜனவரியில் 521 ஆசிரியர்கள் பற்றாக்குறையுள்ளது. அத்துடன் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 619 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை அதிகரிக்கின்றது எனவும் தெரிவித்துள்ள அவர் 2017 ஆம் ஆண்டு ஜனவரியில் இடமாற்றத்தில் 91 ஆசிரியர்கள் செல்லவுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் 14 ஆசிரியர்கள் மாத்திரம் இடமாற்றத்தில் வருகைதரவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது சுமார் இரண்டாயிரத்து 294 ஆசிரியர்கள் 2017 ஆம் ஆண்டில் தேவையான நிலையில் ஆயிரத்து 887 ஆசிரியர்கள் தற்போது உள்ளதுடன் இதில் 407 ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுவதுடன் இதைவிட 91 ஆசிரியர்கள் 2017 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்றுச்செல்கின்றனர்.

தொடர்ந்து 2017 ஆம் ஆண்டு மே மாதத்தில் மேலும் 98 ஆசிரியர்கள் இடமாற்றத்தில் செல்கின்றனர். 23 ஆசிரியர்கள் அத்துடன் அதிபர்களாக கடமைகளைப் பொறுப்பேற்கின்றனர்.

இவ்வாறு 618 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை 2017 ஆம் ஆண்டில் காணப்படுகின்றது என வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (5-15)




# சட்டவிரோத மீன்பிடி; 22மீனவர்கள் கைது

(மன்னார்)

மன்னார் சிலாவத்துறை மற்றும் சவுத்பார் பிரதேசத்தில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த உள்நாட்டு மீனவர்கள் 22 பேர், கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சிலாவத்துறை கடற்பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி சட்டவிரோதமாக கடலட்டைகளை பிடித்துக் கொண்டிருந்த 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 3 படகுகள், ஒட்சிசன் சிலிண்டர்கள் 3, நீர்மூழ்கி உபகரணங்கள், தடை செய்யப்பட்ட வலைகள் மற்றும் 16 கிலோ கிராம் கடலட்டைகள் உட்பட மேலும் சில உபகரணங்களும் கைப்பற்றப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இதுதவிர சவுத்பார் கடற்பரப்பில் வெடி மருந்துகளை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 6 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்த மீனவர்கள் அனைவரையும் மன்னார், மீன்பிடி பரிசோதனை அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (5)

# 'சிறுவர் சிநேக குடும்பம்' வேலைத்திட்டம் முன்னெடுப்பு




(குருமன்காடு)


வவுனியா பிரதேச செயலகத்தில் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு "சிறுவர் சிநேக குடும்பம்" என்னும் தொனிப் பொருளில் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஜே.கென்னடி தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மதவுவைத்த குளம், அண்ணா நகர் மற்றும் அரபாநகர் ஆகிய மூன்று கிராமங்களிலிருந்து 120 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தந்தை அல்லது தாயாரை அல்லது இரண்டு பேரையும் இழந்த பாடசாலை சிறுவர்களுக்கான உபகரணங்களை சிறுவர் அபிவிருத்திலங்கா நிறுவனத்தின்பணிப்பாளர்எஸ்விமலன் வழங்கியிருந்தார். இம் மாணவர்கள் தமது பாடசாலை மற்றும்பல்கலைக்கழக படிப்பை முடிக்கும் வரை தொடர்ச்சியாக சிறுவர் அபிவிருத்தி லங்கா நிறுவனத்தால் கற்றலுக்கான உதவிகள் மாதாந்தம் வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-250)

# வெடிபொருட்கள் மீட்பு



வவுனியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நீலியாமோட்டை, சின்னத்தம்பனை பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வெடிபொருட்களை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நீலியாமோட்டை, சின்னத்தம்பனை பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் வெடிபொருட்கள் இருப்பதனை அவதானித்த புலனாய்வுத் துறை அதிகாரிகள் உடனடியாக வவுனியா விமானப்படையினருக்கு அறிவித்தலை வழங்கியுள்ளனர்.

குறித்த இடத்திற்கு விரைந்த விமானப்படையினர் விடுதலைப் புலிகள் பயன்படுத்தியதாக இருக்கும் என சந்தேகிக்கப்பட்டு விசேட அதிரடிப்படையினருக்கு தகவலை வழங்கியுள்ளனர்.

இதன்போது, கைக்குண்டு ஒன்று, மோட்டார் குண்டு ஒன்று, மிதிவெடி 41 போன்ற வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனால் இப்பகுதியில் சற்று குழப்பமான நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (5-15)

# விபத்தில் குடும்பஸ்தர் காயம்

வவுனியா பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் சேவை முடிந்து தரிப்பிடம் நோக்கிச் சென்ற தனியார் பேருந்து சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்நேற்று இரவு 7.30மணிக்கு இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தனது சேவை முடிந்து வவுனியா தாண்டிக்குளம் - புதுக்குளம் வீதியில் பயணித்த தனியார் பேருந்து பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் எதிரே வந்த சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து சம்பவத்தில் படுகாயமடைந்த மார்கண்டு திருச்செல்வம் (வயது 52) என்பவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (5-250)

# மழை வேண்டி விசேட யாகம்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியை போக்க மழை வேண்டி விசேட யாகம் நேற்று கிளிநொச்சியில் முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை ஆலயத்தில் குறித்த விசேட வழிபாடு இடம்பெற்றது. இரணைமடு விவசாய சம்மேளனம், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த குறித்த வழிபாட்டில், விவசாய அமைப்புக்கள் பலவும் இணைந்து கொண்டன.

மாவட்டத்தில் அதிக வரட்சி காரணமாக இரணைமடு குளத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து காணப்படுகின்றது.

இரணைமடு குளத்தின் கீழ் 20000 ஏக்கர் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளது. இரணைமடு குள்த்தில் சேகரிக்கப்பட்ட நீர் திறந்து விடப்பட்டு, அதன் கீழ் பயிரிடப்பட்ட காலபோக நெற்செய்கை தற்காலிகமாக பாதுகாக்கப்பட்டுள்ளது. குறித்த குளத்தின் நீர்மட்டமும் குறைவடைந்துள்ளமையால், எதிர் வரும்சில நாட்களுக்குள் பருவ மழையை எதிர்பார்த்திருப்பதாகவும், அதற்காகவே இந்த விசேட வழிபாடு இடம்பெற்று வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் மு.சிவமோகன் கருத்து தெரிவிக்கையில்,

இரணைமடு குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளமையால் நெற்செய்கை மற்றும் நிலத்தடி நீர் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கின்றார். குறித்த வரட்சி தொடருமிடத்தில்பாரிய குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டி வரும் எனவும்,வான்பயிர்கள் அழிவடையும் அபாயம் உள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார். இதற்காகவே இந்த விசேட யாகம் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-15)

# 28 ஆம் திகதி தமிழக சட்டசபை சிறப்புக்கூட்டம்-அரசு அறிவிப்பு



மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு இரங்கல்தீர்மானம்நிறைவேற்றுவதற்காக 28 ஆம் திகதி தமிழக சட்டசபை சிறப்பு கூட்டத்தை கூட்டுவதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலிதா உடல் நலக் குறைவின் காரணமாக அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி கடந்த 5 ஆம் திகதி அவர் உயிரிழந்தார்.

ஜெயலலிதாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக தமிழக சட்டசபையின் சிறப்புக்கூட்டம் கூட்ட தமிழக அரசு முடிவு செய்தது. இந்த சிறப்பு கூட்டம் நாளை மறுதினம் 28 ஆம் திகதி கூட்டப்படவுள்ளது.

இந்த சிறப்பு கூட்டத்தில், சபாநாயகர் ப.தனபால், ஜெயலலிதாவின் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து, அவர் மட்டும் பேசுவதா? அல்லது அவை முன்னவர் மூலம் தீர்மானத்தை முன் மொழிந்து, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அவை உறுப்பினர்களை பேச அழைக்கலாமா? என்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இரங்கல் தீர்மானத்தினை கொண்டு வந்து, உரியவர்கள் பேசிய பின்னர், சில நிமிடங்கள் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. இந்த சிறப்பு கூட்டத்தில் மறைந்த முன்னாள் அமைச்சர்கோ.சி.மணி, பத்திரிகையாளர் சோ.ராமசாமி, முன்னாள் எம்.எல். ஏக்களுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்படவுள்ளது. அதுமட்டுமல்லாமல், கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ மறைவுக்கும் இரங்கல் குறிப்பு வாசிக்கப்படவுள்ளது. (இ-3)

# சசிகலாவிடம் அதிரடி சோதனை? வெளியான பரபரப்புத் தகவல்



தமிழகத்தில் வருமான வரித்துறை அதிரடியாக நடத்தி வரும் சோதனையில் பல முக்கிய புள்ளிகள் சிக்கியுள்ள நிலையில் அடுத்தது சிக்கப்போவது சசிகலா என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் குறிப்பாக அரசியல்வாதிகளுக்கு நெருக்கமானவர்களை குறிவைத்து வருமான வரித்துறை அதிரடி சோதனைகள் நடத்தி வருகின்றது. அவர்களிடம் இருந்து எதிர்பார்த்ததை விட அதிகமான இரகசியங்கள் கிடைத்ததாக கூறப்படுகிறது.

இவர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சசிகலா வட்டாரத்திலும் அதிரடியாக சோதனை நடத்த திட்டம் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு சசிகலா தரப்பு தடையாக இருந்தால் அவரை கைது செய்யவும் தயங்காதாம் மேலிடம். இவ்வாறு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது. இதனால் சசிகலா தரப்பினர் கலக்கத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. (இ-3)

# ஆயிரம் கிறிஸ்மஸ் தாத்தாக்கள் மணல் ஓவியர் கின்னஸ் சாதனை

ஒடிசா மாநிலம், பூரியில் உள்ள கடற்கரையில் 'கிறிஸ்மஸ் தாத்தா' எனப்படும் ஆயிரம் சான்ட்டா கிளாஸ்களின் உருவத்தை மணல் ஓவியமாக செதுக்கியதன் மூலம் பிரபல மணல் ஓவியர் சுதர்சன் பட்நாயக் புதியதொரு உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.


கிறிஸ்மஸ் பண்டிகையின் முந்தையநாள் பரிசுப் பொருட்கள் கொண்ட மூட்டையுடன் சிவப்புநிற அங்கி அணிந்து வீடுவீடாகவரும் வெண்தாடி தாத்தா, குழந்தைகளால் அன்புடன் 'கிறிஸ்மஸ் தாத்தா' என்று அழைக்கப்படுகிறார்.

அந்த தாத்தாவின் ஆங்கிலப் பெயர் சான்ட்டா கிளாஸ். 4ம் நூற்றாண்டைச் சேர்ந்த செயின்ட் நிகோலாஸ் என்ற புனிதரின் நினைவாகவே சான்ட்டா கிளாஸ் (கிறிஸ்மஸ் தாத்தா) உருவாக்கப்பட்டார்.

உலகம் முழுவதும் நேற்று கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்பட்டுவரும் நிலையில் கிறிஸ்மஸ் தாத்தாவின் பெயரையும், புகழையும் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற வைக்கும் வகையில் ஒடிசா மாநில மணல் ஓவியக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் புதியதொரு உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.



ஒடிசா மாநிலம், பூரி நகரில் உள்ள கடற்கரையில் உலகத்துக்கு மகிழ்ச்சியை கொண்டு வாருங்கள் என்ற தலைப்பில் ஆயிரம் சான்ட்டா கிளாஸ்களின் உருவத்தை இவர் மணல் ஓவியமாக செதுக்கியுள்ளார். அதன் அருகாமையில் அன்னை மேரி மற்றும் குழந்தை இயேசுவின் திருவுருவங்களையும் மணல் சிற்பமாக செதுக்கி, கிறிஸ்மஸ் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். (இ-3)




# இயேசுநாதரின் போதனைகள் அனைவருக்கும் ஊக்கசக்தியே

## பிரதமர் மோடி வாழ்த்து



(டில்லி)

கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி நேற்று வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ள பிரதமர் மோடி, இயேசுநாதரின் போதனைகள் அனைவருக்கும் ஊக்கசக்தியாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இயேசு கிறிஸ்துவின் உதயதினமான கிறிஸ்துமஸ் பண்டிகை உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டுவரும் நிலையில், நாட்டில் உள்ள கிறிஸ்தவ மக்களுக்கு எனது வாழ்த்துக்கள் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்,

இயேசு கிறிஸ்துவின் போதனைகளும், வாழ்க்கையும் அவர் போதித்த அமைதி, ஒருமைப்பாடு மற்றும் நற்கருணையும் நமக்கு எல்லாம் ஊக்கசக்தியாக விளங்கி வந்துள்ளது.

இந்த இனிமையான திருநாளில் அவரது வாழ்க்கையையும், போதனைகளையும் நாம் நினைவில் வைத்து, கொண்டாடி மகிழ்வோம். அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார். (இ)

# அரபிக்கடல் நடுவே பிரமாண்ட சத்ரபதி சிவாஜி உருவாகிறார்





மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜிக்கு மும்பையில் அரபிக் கடல் நடுவே பிரமாண்ட சிலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன் தினம் அடிக்கல் நாட்டி வைத்துள்ளார். சத்ரபதி சிவாஜிக்கு மும்பை அரபிக்கடலில் நடுவே மகாராஷ்டிர மாநில அரசு சார்பில் மிக பிரமாண்டமாக சிலை மற்றும் நினைவு மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இந்த சிலை 3,600 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள சுதந்திர தேவி சிலையை விட இது உயரமானதாக நிறுவப்படவுள்ளது.


இந்த சிலை மற்றும் நினைவு மண்டப கட்டுமானத் திட்டத்திற்கு பிரதமர் மோடி நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் மகாராஷ்டிர மாநில ஆளுநர் வித்யாசாகர் ராவ், முதலமைச்சர்பட்னாவிஸ் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்ரே உள்ளிட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)





தென்மராட்சி கல்வி வலயத்தால் முன்னெடுக்கப்பட்ட "வர்ண இரவு 2016" நிகழ்வு சாவச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் கலந்து கொண்டார். (படங்கள்:-விஜயவாசன்)





கட்டுவன்-கரண்டக்குளம் ஸ்ரீ ஐயப்பன் ஆலய கொடியேற்றம் அண்மையில் இடம்பெற்ற போது...






கோப்பாய் மகா வித்தியாலயத்தில் ஒளிவிழா நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்ற போது...







யாழ்ப்பாணம் ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் விருது வழங்கும் விழா சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டார்.



வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகம் நடத்திய "போதையற்ற நாடு" எனும் தொனிப் பொருளிலான கலாசார விழிப்புணர்வு வீதி நாடகம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)





கி.செல்லத்துரையின் ''மனப்பட மனிதர்கள்'' சிறுகதை வெளியீடு வல்வெட்டித்துறை இந்து தமிழ் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:-மகாலிங்கம்)







வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா. செந்தில்நந்தனன், வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொற்பதி)


# ஜனவரி 8 ம் திகதி தொடக்கம் 14ம் திகதி வரை

# தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரம் பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

நிலைபேறான அபிவிருத்தியினை அடையும் நோககுடனும் சமாதானம், ஒற்றுமை, நல்லிணக்கம், சகோதரததுவம் என்பவற்றை அடையும் நோக்குடனும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு உருவாக்கப்பட்டது. நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை கருத்தில் எடுத்து இந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளார். இவ் அமைச்சு ஜனவரி மாதம் 8ஆம் திகதி தொடக்கம் 14ஆ ம் திகதி வரையான காலத்தினை ஒவ்வொரு வருடமும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரமாக பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இத்திகதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற காலத்தின் அடிப்படையில் அமைவது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தினை தேர்ந்தெடுத்ததன் நோக்கம் இவ் அரசாங்கமானது சமாதானம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் போன்றவற்றை முக்கியமான தொனிப்பொருளாக வும் கருப்பொருளாகவும் கொண்டிருப்பதனாலாகும்.

இக் காலப்பகுதியில் இன, மத, கலாசார, பிராந்திய ரீதியாக வேறுபட்ட சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவதற்கு பல்வேறுபட்ட விழிப்புணர்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி "வேற்றுமையில் ஒற்றுமையை" ஏற்படுத்துவதேயாகுமென தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.



தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரத்தினுள் நாடு முழுவதும் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளன.

அ) தேசிய ஒருங்கிணைப்பினை பாடசாலைமாணவர்கள மத்தியில் எடுத்துரைத்தல்

இத்தேசிய வாரத்தினுள் நாடு முழுவதுமுள்ள அனைத்து பாடசாலைகளிலும் தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை பாடசாலைகளின் காலைக் கூட்டங்களிலும் வகுப்பறைகளிலும் மாணவர்களினால் தேசிய ஒருமைப்பாடு தொடர்பாக உரையாற்றுதல்.

ஆ) தேசிய ஒருமைப்பாடு தொடர்பான விழிப்புணர்வு

தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவம் தொடர்பாக மும்மொழிகளிலும் அச்சு, இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் மக்களுக்கு உணர்வுபூர்வமான நிகழ்ச்சித் திட்டங்களையும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துதல்.

இ) தனியார்துறையினரை தேசிய ஒருமைப்பாடு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஊக்கமளித்தல்

தத்தமது ஒருங்கிணைந்த சமூகப் பொறுப்பின் ஓர் அங்கமாக தகுந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்படி தனியார் மற்றும் கூட்டிணைந்த நிறுவனங்களை ஊக்குவித்தல்.

ஈ) வடக்கு தெற்கு உரையாடல்கள் மற்றும் கிராமங்களுக்கிடையிலான பரஸ்பர பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள்

அனுபவங்களை பரிமாறிக்கொள்ளல், கற்றுக்கொள்ளல் மற்றும் கலாசார பல்வகைமைகளை புரிந்துகொளளல் ஆகியவை தொடர்பாக வடக்கு தெற்கு உரையாடல்களையும் கிராமங்களுக்கிடையிலான பரஸ்பர பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துதல்.

உ) தேசிய ஒருமைப்பாடு தொடர்பாக போட்டிகளை நடத்தல்

தேசிய ஒருமைப்பாடு தொடர்பான கண்காட்சிகளை நடத்துவதற்கு ஊக்கமளித்தல் மற்றும் கட்டுரை, சித்திரம், காட்டூன், கவிதை மற்றும் சிறுகதைப் போட்டிகளை நடத்தல். அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்தி அவர்களை தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செய்திகளையும் முக்கியத்துவத்தையும் பிரசாரம் செய்யும் மற்றும் "மாற்றத்தினை ஏற்படுத்தும் முகவர்களாக" மாற்றுதல்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் இலக்கு-16 சமாதானத்தை கட்டியெழுப்புவதை தொனிப்பொருளாகக் கொண்டிருப்பதுடன் அமைதி, சமாதானம், சகோதரத்துவம், நல்லிணக்கம் ஆகியவற்றினூடாக உலகினை மக்கள் மகிழ்ச்சியுடன் வாழக்கூடிய ஒரு இடமாக மாற்றுகின்றதை வலியுறுத்துகின்றது.

இந்த அடிப்படையிலே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சர் என்ற வகையில் முன்மொழியப்பட்ட "தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரம்" சமாதானம், சகவாழ்வு மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றை ஏற்படுத்துவதுடன் வேறுபட்ட சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துகின்ற தேசத்தை கட்டியெழுப்புகின்ற ஓர் அடித்தளமாக நோக்கப்படுகின்றது என தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர், வே.சிவஞானசோதி தெரிவித்தார். (இ-3)

## சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருள் கொண்டு செல்வதைத் தடுக்க நடவடிக்கை





சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருள் கொண்டு போவதை தடுக்கும் நோக்குடன் விசேட வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த திட்டமானது நேற்று முன்தினம் மஸ்கெலியா பொலிஸ பிரிவுக்குட்பட்ட மவுசாகலை சந்தியில் உள்ள காவலரணில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் போது, 40 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த நபர் ஒருவர் மஸ்கெலியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் விசாரணையின் பின் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு பிரதேசங்களிலிருந்து சிவனொளிபாதமலைக்கு வருகை தரும் யாத்திரிகர்களில் ஒரு சிலர் போதைப் பொருட்களை சிவனொளிபாதமலைக்கு கொண்டு செல்வதாக இரகசிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலினையடுத்தே இந்த மோப்ப நாய்களின் உதவியுடன் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சிவனொளிபாதமலை யாத்திரைக்காக வருகை தந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட வாகனங்கள் சோதனை செய்யப்பட்டன.

இந்த சோதனை நடவடிக்கையில் ஹற்றன் பொலிஸாரும், மஸ்கெலியா பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (இ-3)

## மகிந்தவின் மைத்துனர் வீரதுங்கவுக்கு விமானப் பாகத்துடன் தொடர்பு

(கொழும்பு)

கிழக்கு கடற்கரையில் மீட்கப்பட்ட விமான பாகத்துடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனருக்கு தொடர்பு இருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் ரஷ்யாவுக்கான தூதுவராக செயற்பட்ட உதயங்க வீரதுங்கவினால் உக்ரேன் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட விமானம் தொடர்பில் மோசடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மட்டக்களப்பு, கல்லுவாஞ்சிக்குடா கடலில் உக்ரேனில் தயாரிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஜெட் விமானத்தின் பாகம ஒன்று கிடைத்துள்ளது.

பாதுகாப்பு செயலாளர் இதுதொடர்பில் கருத்து வெளியிடும் போது, அடையாளம் காண முடியாத வகையிலான எழுத்தில் உள்ள ஜெட் ஒன்றின் பாகம் கிடைத்துள்ளதாகவும் அது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த ஜெட்டின் பாகம் கடந்த காலங்களில் உதயங்க வீரதுங்கவினால் கொள்வனவு செய்யப்பட்ட ஜெட்டின் பாகமாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

தூரம் குறைவான விமானங்கள் கொண்டு வந்தமை மற்றும் அந்த விமானங்கள் தொடர்பில் எவ்வித ஆய்வும் மேற்கொள்ளப்படாமையினால் இந்தக் கொடுக்கல்-வாங்கல் தொடர்பில் மீண்டும் விசாரணை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பமாக இதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என அரசாங்கத்தின் பொறுப்பு கூற வேண்டிய நபர்கள் எனத் தெரிவித்தனர். அதற்கமைய இந்த ஜெட் விமானம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை வழங்குவதற்காக குறித்த பிரிவு செயற்பட வேண்டும்.



உதயங்க வீரதுங்க உட்பட இது தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரிடம் சட்டத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-3)

## மலையகத்தில் தீ விபத்து

நோர்வூட் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட காசல்ரீ நீர்தேக்க பகுதியில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் இனந்தெரியாதோரால் பாதுகாப்பு வனப்பகுதிக்கு வைக்கப்பட்ட தீயினால் சுமார் 5 இற்கு மேற்பட்ட ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளன.

நீரேந்தும் பிரதேச காட்டுப்பகுதியில் இத் தீ ஏற்பட்டதன் காரணமாக நீருற்றுக்கள் அற்றுப் போகும் அபாயம் உருவாகியுள்ளன. தற்போது நீர்த்தேக்கங்களின் நீர் மற்றும் குறைந்து வரும் நிலையில் மின்சார உற்பத்தியில் பாதிப்பு ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனினும் நீர்த்தேக்கங்களுக்கு அண்டிய பகுதியிலும் நீரேந்தும் பிரதேசங்களிலும் இவ்வாறு காடுகளுக்கு தீ வைப்பதனால் எதிர்காலத்தில் நீர் மட்டம் மிக வெகுவாக குறைந்து மின் உற்பத்தியும் பாதிக்க கூடும். அண்மைக்காலமாக வறட்சியான காலநிலையின் போது காட்டுப்பகுதிகளுக்கு தீ வைப்பது அதிகரித்துள்ளன. இது மிருகங்களை வேட்டையாடுவதற்கு இவ்வாறு தீ வைக்கப்படுவதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எது எவ்வாறான போதிலும் காட்டுக்கு தீ வைந்துள்ளது, எமக்கு உரித்தான இயற்கை சூழலினை அழிப்பதற்கு எவருக்கும் இடமளிக்கக்கூடாது. எனவே பொறுப்பு வாய்ந்தவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சூழல் மீது அக்கறை கொண்டோர் சுட்டிக்காட்டினர். (இ-3)







யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் யாழ். கரிகணன் பதிப்பகத்தாரும் இணைந்து நேற்று முன்தினம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திய நாவலர் விழாவில் சிறப்பு நிகழ்வாக ஸ்ரீமதி ஷாலினி வாகீஸ்வரசர்மாவின் நடனம் இடம்பெற்றது. ஷாலினியின் ஆற்றுகை நிறைவில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணத்திற்கான இந்தியத்துணைத்தூதர் ஆ.நடராஜன் ஆகியோர் நினைவுக் கேடயத்தைக் கையளித்தனர்.

# கற்பித்தலியல் தேசிய டிப்ளோமா இறுதிப் பரீட்சையில் 100 வீதம் சித்தி

## யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தெரிவிப்பு

இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் இந்தவருடம் நடத்தப்பட்ட கல்வியியற் கல்லூரிக்கான கற்பித்தலியல் தேசிய டிப்ளோமா இறுதிப் பரீட்சையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் முதன்முறையாக அனைத்து மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான கற்பித்தலியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறி பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை இலங்கை பரீட்சை திணைக்களத்தால் ஒவ்வொரு வருடமும் நடைபெறும். அந்தவகையில் இம்முறை (2016) யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர் அதில் இந்தவருடமே யாழ்ப்பாண தேசிய கல்வியியற்கல்லூரிமாணவர்கள்முதன முறையாக 100 வீதம் சித்தியடைந்துள்ளனர் என யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தெரிவித்தார். (இ-9)

# எம்.ஜி.ஆர்.நினைவுதினம் யாழில் அனுஷ்டிப்பு





தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி. இராமச்சந்திரனின்(MGR) 29ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் யாழில் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு, எம்.ஜி.இராமசந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான யாழ். எம்.ஜி. ஆர்.கோப்பாய் சுந்தரலிங்கம் மாலை அணிவித்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.அதனை தொடர்ந்து வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.இந்நிகழ்வில் எம்.ஜி.ஆரின் ரசிகர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர் சிலை எம்.ஜி. இராமச்சந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்தின சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# வட மாகாண கல்வியில் அரசியல் தலையீடுகளை உடன்நிறுத்த வேண்டும்

## உறுப்பினர் கஜதீபன் வேண்டுகோள்



கல்வியில் அரசியல் தலையீடுகளை நீக்குவதாகக் கூறி பதவிக்கு வந்த நாம், நம்முடைய ஆட்சியில் எவ்வாறு நடந்துகொள்கிறோம். கல்வியமைச்சர் இதனை சுய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை வடமாகாண சபையில் இடம்பெற்ற கல்வியமைச்சு மீதான பாதீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் "கல்வியில் அரசியல் தலையீடுகள் இருக்கிறது.கல்வியின் சீரழிவிற்கு இதுதான் பிரதான காரணமாக இருக்கிறது.ஆளுநரும் அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கி வருகின்ற குழுக்களும் தான் இன்றைய எமது கல்வியை சீரழிக்கின்றன. இவற்றிற்கு ஒரு நிரந்தர முடிவு கட்ட வேண்டும் என 2013 களில் நாம் பேசியிருக்கிறோம். இவை அனைத்தும் உண்மையானவையும் கூட.ஆனால் இவற்றை எல்லாம் பேசி பதவிக்கு வந்து இன்றைக்கு மூன்று ஆண்டுகள் கடந்து இருக்கிறது. இதே விமர்சனங்கள் இன்று எம்மை நோக்கியே கல்வி சமூகத்தால் திருப்பிக்கூறப்பட்டு வருகிறது.

கடந்த 22 ஆம் திகதி நானும் மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் கல்வி சமூகத்தினர் சிலருடன் சந்தித்து உரையாடக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது அவர்கள் சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்கள். நாங்கள் எலலோரும் அதிர்ந்து போனோம். கல்வித்துறையில் பல்வேறான அரசியல் தலையீடுகள் மற்றும் எந்த விடயங்களிலும் சுதந்திரமாக செயற்பட முடியாத நிலைமை தற்போதும தொடர்வதாகக் கூறியிருந்தார்கள். ஆனால் அவர்கள் எந்த மாகாணசபை உறுப்பினர்களையும் குற்றம் சாட்டவில்லை.

இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசல்புரசலாக நாமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிந்துகொண்டு தான் இருக்கின்றோம். இவ் வாறான நிலைமை ஆரோக்கியமானது அல்ல. தமிழ்த் தேசியத்தைப்பேசி ஆட்சிக்கு வந்த நாம் முன்னைய தவறுகளையே தொடருவதென்பது ஏற்றுக்கொள்ளவே முடியாத விடயம். இந்த விடயத்தில் இனி மேலாவது கூடுதலான கவனத்தைச்செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும் எமது அமைச்சினால் தரம் 1 மாணவர்கள் சேர்க்கை தொடர்பான விடயங்களில் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகளை இன்னும் இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம். ஏனெனில் இவ்வாறு மாணவர்களின் எண்ணிக்கையை படிப்படியாகக்கட்டுப்படுத்துவதினூடாகத்தான் ஏனைய பாடசாலைகளுக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பரம்பலடையச் செய்ய முடியும். இவற்றை நடைமுறைப்படுத்துவதனூடாக முன்னைய திட்டமான மாணவர்கள் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகளை தற்காலிகமாக வேறு பாடசாலைகளோடு இணைத்தல் என்கின்ற செயற்பாட்டை இல்லாதொழிக்க முடியும்.

அத்தோடு 7 ஆண்டுகளுக்கு ஒருதடவை ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்ற போது பிரபலமான பாடசாலையிலிருந்து இன்னுமொரு பிரபலமான பாடசாலைக்கு இடமாற்றம் செய்வதைத்தவிர்த்து வேறு பாடசாலை மாணவர்களுக்கும் அவர்களது சேவை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். அப்பொழுது தான் எல்லா ஆசிரியர்களும் ஒரே தரமானவர்கள் தான், எல்லாப் பாடசாலைகளும் ஒரே தரமானவைகள் தான் என்கின்ற மனநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்திட முடியும். அத்தோடு சில ஆசிரியர்கள் அரசியல்செல்வாக்குகள் மூலமாக, மற்றும் உயரதிகாரிகளின் செல்வாக்குகள் மூலமாக இடமாற்றம் பெற்றுக் கொள்வது, சலுகைகளை அனுபவிப்பதும் உட்பட எந்த விதமான துஷ்பிரயோகங்களும் 2017 இல் இடம்பெறுவதை நாம் அனுமதிக்கவே கூடாது.

அதேபோல் சில ஆண்டுகளாக ஆசிரியர்களது சம்பள நிலுவை மற்றும் அவர்களது பதவி உயர்வுகள் என்பன தொடர்பான விடயங்கள் மந்த கதியிலேயே செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறில்லாமல் வருகின்ற 2017 இல் விரைவான மாற்றத்தை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இவ்விடயங்களில் மாற்றம் வருமென்றும் பலமாக நம்புகின்றோம்.

மேலும் இன்று சிக்கலாக மாறி இருக்கின்ற அதிபர் நியமனம் சுமுகமாகத் தீர்வுக்குக்கொண்டு வரப்பட வேண்டும். குறிப்பாக இவ்விடயம் யாழ்ப்பாண வலயம் மற்றும் வலிகாம வலயங்களில் தான இந்நெருக்கடி அதிகமாக இருக்கின்றது. தரம் மூன்றில் சித்தியெய்திய 392 அதிபர்களுக்கும் பொருத்தமான பாடசாலைகள் வழங்கப்பட வேணடும் என்பதில் மாற்றுக கருத்துக்களுக்கு இடமில்லை. அவர்களுக்கு அவர்களது விருப்பத்துக்கு ஏற்றால் போல் அதிபர், பிரதி அதிபர், உப அதிபர் ஆகிய பதவி நிலைகளுக்கு உள் வாங்கலாம். மீதமிருக்கும் போது கடமை நிறைவேற்று அதிபர்களையும் நாம் தொடரலாம். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-89)

# சொத்து தொடர்பான விபரங்களை வழங்காத அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

**சொத்து விபரங்கள் பற்றிய ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காத அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

வார இறுதி பத்திரிகையொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 30 ஆம் திகதி சொத்து விபரங்களை வழங்காத அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நாளை மறுதினம் 28 ஆம் திகதி கூடி இது குறித்து விசேட ஆய்வுகளை நடத்தவுள்ளனர்.

ஆய்வுகளின் பின்னர் சொத்து விபரங்களை வழங்காத அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சொத்து விபரங்கள் பற்றிய அறிக்கை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டமைக்கான ஆவணங்கள் பல இன்னமும் கிடைக்கவில்லை என தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்றிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆவணங்களை சமர்ப்பிக்காதவர்கள் தொடர்பில் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ததன் பின்னர் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், சொத்து விபரங்களை ஒப்படைக்குமாறு ஏற்கனவே அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவித்துள்ள நிலையில் சிலர் வேண்டுமென்றே இவ்வாறு விபரங்களை வழங்க மறுத்து வருவதாக மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ஆரூட எச்சரிக்கையால்

# ஜனாதிபதி மைத்திரியின் பாதுகாப்பு திடீர் அதிகரிப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக வெளியான ஆரூடங்களை அடுத்து அவரது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதிக்குள் உயிரிழப்பார் என்று விஜிதமுனி ரோகண என்பவர் ஆரூடம் வெளியிட்டுள்ளார்.

இந்த ஆரூடத்தின் பின்னணியில் ஒரு அரசியல் சதி இருப்பதாகவும், இதுகுறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கையின் ஊடகத்துறை அமைச்சின் செயலர் நிமல் போபகே தெரிவித்தார்.

இந்த நிலையில், ஜனாதிபதியின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதாக பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

ஆரூடம் மற்றும் அதன் பின்னணியில் சதித் திட்டங்கள் உள்ளனவா என்பது பற்றி பாதுகாப்புத் தரப்புகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அதுபற்றிய தகவல்களை வெளியிட முடியாது, எனினும், ஜனாதிபதி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும தெரிவித்தார். (இ-3)

# பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு இலட்சம் ரூபாயை பெறுவது அநீதியானது - ரஞ்சன்

(கொழும்பு)

சொந்தமாக ஹெலிகொப்டர்கள் மற்றும் பாரிய வர்த்தகங்களைக் கொண்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கான கொடுப்பனவை பெற்றுக் கொள்வது அநீதியானது என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒரு இலட்சம் ரூபாயை கொடுப்பனவை நிராகரித்தமை குறித்து கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரிய செல்வச் செழிப்புடன் கூடிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றார்கள்.

மிகவும் வறிய நிலையில் காணப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இல்லாமல் இல்லை, அதனை நான் ஒப்புக்கொள்கின்றேன்.

அவ்வாறானவர்கள் இந்தக் கொடுப்பனவை பெற்றுக் கொள்வதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. எனினும் பாரியளவு செல்வத்தைக் கொண்ட அதிக வருமானத்தை ஈட்டி வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவை பெற்றுக்கொள்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார். (இ-3)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மூலம் செவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L கனடா PR
தொ.இ: B/6670

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 61
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்
தொ.இ: B/6672

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் செவ் 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில்
தொ.இ: B/6674

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Diploma/ முகாமையாளர் நியூசிலாந்து
தொ.இ: B/6675

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 10
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: G/3168

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 14சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/3170

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 41செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/3181

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 60சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
தொ.இ: G/3197

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை

## இராணுவ பட்ஜெட் ரூ.41 இலட்சம் கோடி

# இந்தியாவுடன் இராணுவ ஒத்துழைப்பை அமெரிக்கா அதிகரிக்கும் - ஒபாமா



## ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்கவும் திட்டம்

அமெரிக்காவின், ரூ.41 இலட்சம் கோடி இராணுவ பட்ஜெட்டுக்கு, அந்த நாட்டின் ஜனாதிபதி ஒபாமா ஒப்புதல் வழங்கியுள்ளார். இதில் இந்திய, அமெரிக்க இராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இராணுவ பட்ஜெட்**

உலக வல்லரசு நாடுகளில் அமெரிக்காவுக்கு தனிச் சிறப்பான இடம் இருக்கிறது. இதனால், இராணுவத்தில் வலிமை வாய்ந்த நாடாக திகழ்வதில் அந்த நாடு கவனம் செலுத்தி வருகிறது.

அந்த வகையில், அரசின் பிற சேவை துறைகளுக்கு நிதி ஒதுக்கி செலவழிப்பதை விட, இராணுவத்துக்கு திரளான தொகையை ஒதுக்கீடு செய்து வருகிறது. அந்த நாடு 2017 ஆம்ஆண்டுக்கு இராணுவத்துக்கு 618 பில்லியன் டொலர் (சுமார் ரூ.41 இலட்சத்து 40 ஆயிரம் கோடி) ஒதுக்கீடு செய்து பட்ஜெட் தயாரித்துள்ளது.

**ஒபாமா ஒப்புதல்**

தற்போது கிறிஸ்மஸ் பண்டிகை, புத்தாண்டுவிடுமுறையை கழிக்க ஹவாய் தீவுக்கு சென்றுள்ள ஜனாதிபதி ஒபாமா, இராணுவ பட்ஜெட் தொடர்பான 'தேசிய பாதுகாப்பு அங்கீகார சட்டம்-2017இற்கு ஒப்புதல் வழங்கி நேற்று முன்தினம் கையெழுத்திட்டார்.

இதில், அமெரிக்காவின் முக்கிய இராணுவ கூட்டாளியாக இந்தியாவை அங்கீகரிப்பதற்கு தேவையான நடவடிக்கையை அமெரிக்க இராணுவ அமைச்சரும், வெளியுறவு அமைச்சரும் எடுக்குமாறு கூறப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

**இராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்கும்**

இந்த பட்ஜெட்டின் முக்கிய அம்சங்களை செனட் சபையின் ஆயுத பணிகள் குழு தலைவர் ஜான் மெக்கைன் வெளியிட்டார். அப்போது அவர், "தேசிய பாதுகாப்பு அங்கீகார சட்டம் -2017, இந்தியாவுடனான இராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்க வகை செய்துள்ளது" என கூறினார்.

நிர்வாக தரப்பில் இருந்து, இராணுவ கொள்முதல், தொழில்நுட்பத்தில் அனுபவமிக்க ஒருவரை தனியாக நியமித்து, இந்திய, அமெரிக்க இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்திய, அமெரிக்க இராணுவ வர்த்தகம், பாதுகாப்பு ஒத்துழைப்பு, கூட்டு தயாரிப்பு, கூட்டு வளர்ச்சி வாய்ப்புகளில் உதவ வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**பாகிஸ்தானுக்கு நிபந்தனைகள்**

தேசிய பாதுகாப்பு அங்கீகார சட்டம்-2017இன் முக்கிய அம்சங்கள்:-

★ ஐ.எஸ். அமைப்பினருக்கு எதிரான யுத்த வகைக்கு 1.2 பில்லியன் டொலர் (சுமார் ரூ.8,040 கோடி) நிதியம் தொடங்க வகை செய்யப்பட்டுள்ளது.


★ 900 மில்லியன் டொலர் கூட்டணி ஆதரவு நிதியில் 400 மில்லியன் டொலர் நிதியை (சுமார் ரூ.2,680 கோடி) நிதியை பாகிஸ்தான் பெற்றுக்கொள்வதற்கு 4 நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதாவது, பாகிஸ்தானுக்கு கூட்டணி நிதி தருவதற்கு அமெரிக்க இராணுவ அமைச்சர் பாராளுமன்றத்துக்கு சான்றிதழ் வழங்க வேண்டும்.

அதில் பாகிஸ்தான், ஹக்கானி நெட்வேர்க் பயங்கரவாத அமைப்பினரின் சொர்க்கபுரியாக திகழ்ந்து, அந்த இயக்கத்தினர் தாராளமாகவும், சுதந்திரமாகவும் நடமாடுவதை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும், அந்த இயக்கத்தினர் பாகிஸ்தான் மண்ணை பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதை தடுக்கவும் பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்கிறது என்றும் சான்று வழங்கப்பட வேண்டும். இது முக்கியமான நிபந்தனை ஆகும்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் பாகிஸ்தானுக்கு அமெரிக்க இராணுவ அமைச்சர் ஆஷ்டன் கார்ட்டர், இப்படி ஒரு சான்றிதழை அளிப்பதற்கு மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தலிபான் தலைவர் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி!



அமெரிக்க தாக்குதலுக்கு முன்பாக ஆப்கானிஸ்தானில தலிபான்கள் ஆட்சி நடத்தினர். அப்போது பாகிஸ்தானுக்கான தலிபான் தூதராக பணியாற்றியவர், முல்லா அப்துல் சலிம் ஜாயீப்.

தற்போது அவர் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வசித்து வருகிறார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அவரது வீட்டின் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், சரமாரியாக துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பி ஓடி விட்டார்கள்.

இந்த தாக்குதலில் ஒருவர் பலியானதாக தகவல்கள் கூறுகின்றன. ஆனால் தாக்குதல் நடந்தபோது முல்லா அப்துல் சலிம் ஜாயீப் வீட்டில் இல்லை.

இந்த சம்பவம் குறித்து காபூல் பொலிஸ் குற்றப்புலனாய்வுத்துறை தலைவர் பிரைதூன் ஒபைதி கூறுகையில், "முல்லா அப்துல் சலிம் ஜாயீப் வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் யார், அதன் பின்னணி என்ன என்பது தெரியவரவில்லை. 2 பேர் வந்து தாக்குதல் நடத்தி விட்டு தப்பி உள்ளனர். இது தொடர்பாக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறோம் என குறிப்பிட்டார்.

இந்த தாக்குதலுக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை.

காபூலில் ஹெல்மாண்ட் மாகாண எம்.பி., மிர்வாலியின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 2 நாட்கள் ஆன நிலையில் இந்த தாக்குதல் நடந்திருப்பது அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (இ-3)

## தமிழக பொறியியலாளர் பாரிஸில் குத்திக்கொலை

பாரிஸ் நகரத்தில் தமிழக பொறியியலாளர் குத்திக்கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம், கொள்ளை முயற்சியில் நடந்திருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தின் தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தை சேர்ந்தவர் மணிமாறன் (வயது 26). இவர் பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் எந்திர பொறியியல் படித்து பட்டம் பெற்றுவிட்டு, அங்கேயே பொறியியலாளராக வேலை செய்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் இவர் தனது நண்பர் ஒருவரைப் பார்ப்பதற்காக பாரிஸ் பதினைந்தில் உள்ள 12 ஆம் எண் மெட்ரோவில் உள்ள வாகிரார்டு மெட்ரோ நிலையத்தில் வந்திறங்கினார்.

அப்போது அவர் அந்த மெட்ரோ நிலையத்துக்கு வெளியே நெஞ்சிலும், கழுத்திலும் கத்தியால் குத்தப்பட்டார். இரத்தம் வழிந்து கொண்டிருந்த நிலையில் அப்படியே நண்பரின் வீட்டுக்கு சென்று அழைப்பு மணியை ஒலித்து விட்டு, அங்கு சரிந்து விழுந்து மரணம் அடைந்தார்.

அழைப்பு மணி ஓசை கேட்டு வெளியே வந்த அவரது நண்பர், தன்னைக் காண வந்த நண்பர் மணிமாறன் இரத்த வெள்ளத்தில் சடலமாக சரிந்து கிடந்தது கண்டு அதிர்ச்சி அடைந்து பொலிஸில் புகார் செய்தார்.

இது தொடர்பாக பாரிஸ் நகர பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருவதுடன், கொலையாளியை தேடியும் வருகிறார்கள்.

கொள்ளை முயற்சியில் இந்த கொலை நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. யாரேனும் திட்டமிட்டு கொன்றிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இந்த சம்பவம், அங்கு வாழும் தமிழர்கள் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது. (இ-3)

## கிறிஸ்மஸ், புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது அமெ. தேவாலயங்களில் ஐ.எஸ். தாக்குதல் ஆபத்து

### ஒபாமா அரசு எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ஈராக், சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினர் உலக அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றனர்.

இந்த நிலையில் அமெரிக்காவில் கிறிஸ்மஸ், புத்தாண்டு கொண்டாட்டங்களின்போது தேவாலயங்களையும், பொதுமக்கள் கூடும் இடங்களையும் குறிவைத்து ஐ.எஸ். அமைப்பினர் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சுறுத்தல் உள்ளதாக தெரிய வந்துள்ளது.

ஐ.எஸ். ஆதரவு இணையத் தளங்களில் அமெரிக்காவில் உள்ள முக்கிய தேவாலயங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.



ஐ.எஸ். அமைப்பினரின் தாக்குதல் அபாயம் பற்றி ஒபாமா அரசின், மத்திய உளவுப்படையும் (எப்.பி.ஐ.), உள்நாட்டு பாதுகாப்பு துறையும் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளன. இதுபற்றி நாடு முழுவதும் உள்ள சட்ட அமுலாக்கல் அமைப்புகளுக்கும், தனியார் பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் தகவல் தரப்பட்டுள்ளது.

இதுபற்றி அமெரிக்க சட்ட அமுலாக்கல் துறை அதிகாரிகள் கூறுகையில், "இந்த இடத்தைத்தான் தாக்கப்போகிறார்கள் என்ற வகையில் குறிப்பிட்ட எந்தவொரு அச்சுறுத்தலும் இல்லை. இருந்தபோதிலும், ஐ.எஸ். ஆதரவு இணையத்தளங்களில் தேவாலயங்களின் பட்டியலை வெளியிட்டிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. எனவே எந்தவொரு சந்தேகத்துக்கிடமான அறிகுறியின் மீதும் மிகுந்த கண்காணிப்பும், கவனமும் கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்" என தெரிவித்தனர். (இ-3)

# வடக்கு - தெற்கை இணைக்கும் தீர்வையே ஜே.வி.பி. ஆதரிக்கும்

## வடக்கு - கிழக்கு இணைப்பு இனவாதமாம்



(கொழும்பு)

**தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வைக்கப்படும் அரசியல் தீர்வானது வடக்கையும் தெற்கையும் இணைக்கும் - இன ஒற்றுமையைக் கட்டியெழுப்பக்கூடிய தீர்வாக இருக்க வேண்டுமே தவிர வடக்கு - கிழக்கை இணைக்கும் இனவாதத் தீர்வாக அமையக்கூடாது என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.**


"புதிய அரசமைப்புத்தேவை என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஏகாதிபத்திய அரசமைப்பை மாற்றுவதற்கே மக்கள் இந்த அரசுக்கு ஆணை வழங்கினர். அரசமைப்பை மாற்றும் ஒரு பகுதியாகத்தான் 19ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 19 இற்கு அப்பால் சென்று புதிய அரசமைப்பை விரைவாக கொண்டு வர வேண்டிய தேவை இப்போது உணரப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய அரசமைப்பில் தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் தேர்தல் முறைமை தான் சிக்கலான விடயங்களாகும்.

அரசியல் தீர்வைப் பொறுத்தவரை அது முழு நாட்டுக்கும் - முழு மக்களுக்கும் ஒரு சிறந்த தீர்வாக அமைய வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். பிரச்சினையைத் தீர்க்கப் போய் வேறு பிரச்சினைகளை உருவாக்கும் தீர்வாக அது அமைந்துவிடக்கூடாது. அரசியல் தீர்வில் வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதை ஒருபோதும் ஏற்க முடியாது. வடக்கு - கிழக்கை இணைப்பதை விட வடக்கையும் தெற்கையும் இணைப்பதே சிறந்ததாகும். வடக்கு - தெற்கு இணைப்பு என்பது சிங்கள - தமிழ் மக்களை இணைப்பதாகும். அவர்களிடையே நிலையான ஒற்றுமையைக் கட்டி எழுப்புவதாகும்.

இப்படியான ஓர் அரசியல் தீர்வுதான் இந்த நாட்டுக்குத் தேவை. இனங்களிடையே ஒற்றுமையைக் கட்டியெழுப்பாது - அவர்களிடையே இணைப்பை ஏற்படுத்தாது வெறும் இடங்களை மாத்திரம் இணைப்பது இருக்கின்ற பிரச்சினையை மேலும் அதிகரிப்பதாகவே அமையும்" என்றார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

# தேஜஸ் போர் விமானத்தை ஆய்வு செய்தார் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில






(கொழும்பு)

அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல கபில ஜெயம்பதி, இந்தியாவில தயாரிக்கப்பட்ட இலகு தாக்குதல உலங்குவானூர்தியைச் செலுத்திப் பார்த்துள்ளார் என்றும், தேஜஸ் போர் விமானத்தின் கட்டுப்பாட்டு முறையை ஆய்வு செய்துள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐதராபாத்தில் உள்ள இந்திய விமானப்படைப் பயிற்சி மையத்தில் பயிற்சியை முடித்து வெளியேறும் விமானப்படை அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட இலங்கை விமானப்படைத் தளபதி கடந்த வாரம் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்தப் பயணத்தின் போது, பெங்களூர் விமானப்படைத் தளத்துக்குச் சென்றிருந்த இலங்கை விமானப் படைத் தளபதி, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இலகு தாக்குதல் உலங்கு வானூர்தியைச் செலுத்திப் பார்த்துள்ளார்.

அத்துடன், இந்தியாவின் தேஜஸ் போர் விமானத்தின் கட்டுப்பாட்டு பொறிமுறைகளையும் ஆய்வு செய்தார்.

இலங்கை விமானப்படைத் தளபதி, உலங்குவானூர்தியை செலுத்தும், தேஜஸ் போர் விமானத்தை ஆய்வு செய்யும் ஒளிப்படங்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை விமானப் படைக்கு, தேஜஸ் போர் விமானங்களை விற்பனை செய்வதில் இந்தியா ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# ஜனாதிபதித் தேர்தலை இனி நடத்தக் கூடாது

## அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்து

(கொழும்பு)

"இந்த நாட்டு மக்கள் வழங்கிய ஆணைக்கு இணங்க இனி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக்கூடாது. மீறி நடத்தப்பட்டால் பலமான வேட்பாளர் ஒருவரை நிறுத்தி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி பதவியை கைப்பற்றி அதை ஒழித்துக்கட்டுவோம்" என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசின் தற்போதைய நகர்வு தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது, "2015 ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்தலாகும்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்காக இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆணை வழங்கிய ஒரு தேர்தலாகும்.

எல்லா ஜனாதிபதித் தேர்தலிலும் இந்த நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கே மக்கள் வாக்களித்தனர். ஆனால், வெற்றி பெற்றதும் ஜனாதிபதியினர் மக்களின் அந்த ஆணையை மீறி நடந்ததுதான் வரலாறு.



நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பார்கள் என்று நம்பி சந்திரிகாவுக்கும் மகிந்தவுக்கும் நாம் ஆதரவு வழங்கினோம். ஆனால், அவர்கள் அந்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை.

இறுதியாக மைத்திரிக்கு ஆதரவு வழங்கி அவரை வெற்றிபெற வைத்தோம். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான சில வேலைகளை நாம் செய்தோம்.

வருகின்ற புதிய அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும். இனி ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடாது. மீறி நடத்தப்பட்டால் அந்தப் பதவியைக் கைப்பற்றி அதை ஒழித்துக் கட்டும் வகையில் நாம் நடவடிக்கை எடுப்போம். பலமான மக்கள் சக்தியின் ஊடாக பலமான வேட்பாளர் ஒருவரை நிறுத்துவோம்" எனத் தெரிவித்துள்ளார். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## தடித்த வார்த்தைகள் ஏன்?

நமக்கு ஒருவர் மீது கோபம் வரலாம் வருத்தம் ஏற்படலாம். அதைச் செய்கையால் அல்லது சிறு குறிப்பால் உணர்த்தினால் போதுமானது.

சிலபேர் இருக்கிறார்கள். இவர்கள் கோபமோ வருத்தமோ ஏற்பட்டால் பிறரோடு பேசவேமாட்டார்கள். மௌனமாகி விடுவார்கள். யாரோடு அவர்கள் கோபமோ அல்லது வருத்தமாக இருக்கிறார்களோ அவர்களோடு பேச மாட்டார்கள். அவர்களுக்கு இதைவிடத் தண்டனை வேறு வேண்டாம்.

இதற்கு நேர்மாறானவர்கள் தாம் இன்று அதிகம். அதாவது இவர்களுள் பலருக்கு எடுத்தவுடன் கைதான் பேசும். இவர்கள் வன்முறையாளர்கள். பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காதவர்கள். பொலிஸ் என்றும் கோர்ட் என்றும் கேஸ் என்றும் அலைவதற்கு அஞ்சாதவர்கள். இவர்களை வார்த்தைகளால் மாற்றவே முடியாது. அடிபட்டுத் தான் இவர்கள் திருந்த வாய்ப்புண்டு.

இவர்களுக்கு அடுத்த ரகத்தினரும் தரக்குறைவானவர்களே. அதாவது கன்னா பின்னாவென்று பேசுவார்கள். சேரியில் புழங்கும் கெட்ட வார்த்தைகளைச் சொல்லித் திட்டுவது என்றால் இவர்களுக்கு வெல்லம். பெரிய மனிதர்கள் என்ற பெயர் எடுத்தவர்களுள் கூட இத்தகைய ரகத்தினர் உண்டு.

இறுதியாக வருபவர்கள் இருக்கிறார்களே, இவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? தங்கள் தரத்திலிருந்து மிக இறங்கிப் போய்ப் பேசுவார்கள். ஆனாலும் கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்த மாட்டார்கள். பெரிய ஆள்களைக் கூடக் கோபத்தில் சட்டென்று மரியாதைக் குறைவாக நீ வா- போ- என்று பேசி விடுவார்கள். தங்களுடைய குடும்ப உறுப்பினர்களுடனோ வேலைக்காரர்களுடனோ கோபம் என்றால் கழுதை, சனியன் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி விடுவார்கள்.

மேலும்,

நீ சோறு தானே திங்கிறே? உன் உடம்பில் என்ன சாக்கடையா ஓடுது? கொப்பன் வீட்டுச் சொத்தா இது? கொஞ்சமாவது அறிவிருக்கா? என்று பேசுவார்கள், இது தான் தடித்தனமாகப் பேசுவது என்பது.

ஒருவன் தவறே செய்துவிட்டால் கூட, இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்கும் போது தாம் செய்த தவறை உணர மறுக்கிறார்கள். அவர்களது நினைப்பெல்லாம் வேறு திசையில் திரும்பி விடுகிறது. இப்படிப் பேசிவிட்டாரே என்பது தான் அவர்களது நினைப்பை ஆக்கிரமிக்கிறது.

தவறு செய்தவர்களை நாம் கண்டிக்கலாம். தவறில்லை. ஆனால் அந்தக் கண்டிப்பில் ஓர் அநாவசியச் சொல் கூட இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியம். அளவெடுத்துத் தைத்த சட்டையைப்போல் அது கச்சிதமாக அமைய வேண்டும்.

நாளைக்கு நியாயம் பேசுபவர்களும் பார்வையாளர்களும் என்ன இருந்தாலும் நீங்க அப்படிப் பேசியிருக்கக்கூடாது என்று சொல்லும் நாய் இடந்தந்து விடக் கூடாது.

அது மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்களே கூட அவர் கேட்டதில் என்ன தவறு என் மீது தான் என்று உணரும் படியாகப் பேசுவதே நமக்கு எல்லா வகையிலும் பாதுகாப்பு.

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






ஒரு பேட்டியில் ஜெயலலிதா இவ்வாறாகச் சொன்னார். "நான் இதுவரை நிபந்தனையற்ற அன்பை உணர்ந்ததே இல்லை. கதைகளில், இலக்கியங்களில், திரைப்படங்களில வேணடுமானால் அத்தகைய நிபந்தனையற்ற அன்பு இருக்கலாம். ஆனால், அத்தகைய அன்பு நிஜ வாழ்க்கையில் இருப்பதாக நான் கருதவேயில்லை" என்று. அத்தகைய பேரன்பைத்தான் புத்தகங்களின்... வார்த்தைகளின் இடுக்குகளில் தேடினாரோ,



என்னவோ...? ஆம்... எப்போதும் புத்தகமும் கையுமாகத்தான் அவர் திரைத் துறையின் தொடக்க காலத்திலிருந்து இருந்திருக்கிறார். புத்தகம் அவர் தேடிய, ஏங்கிய பேரன்பை வழங்கியதா என்றெல்லாம் தெரியவில்லை... ஆனால், அவருக்கு கட்டற்ற உலக ஞானத்தை வழங்கியது.

"அவரிடம், அயர்லாந்து தேரதல் பற்றியும் உரையாடலாம... மாஓசேதுங் பற்றியும் பேசலாம்" என்கிறார், 1970களில் ஜெயலலிதாவை அதிகம் பேட்டி கணட திரைஞானி. அவரே. அந்தச் சமயத்தில் நடந்த ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தையும் பகிர்ந்து இருக்கிறார்.

**"நான் அரசியலுக்கு வந்திருப்பேன்!"**

அந்தச் சம்பவம் இதுதான். "அயர்லாந்தில் நடந்த தேர்தலில் ஒரு பெண் வெற்றி பெற்றார். அயர்லாந்து குறித்தெல்லாம், நமக்குத் தெரியாதுதானே...? ஆனால், ஜெயலலிதா தேர்தல் நடக்கும் சில தினங்களுக்கு முன்பே.... 'அந்தப் பெண்தான் வெற்றி பெறுவார்' என்று சரியாகக் கணித்துச் சொன்னார். உண்மையில், நான் வியந்து தான் போனேன்..!" என்கிறார் திரைஞானி. அந்தச் சமயத்தில் திரைஞானி இன்னொன்றையும் எழுதி இருந்தார், "நான் நினைக்கிறேன். ஜெயலலிதா சினிமாவுக்கு வரவில்லையென்றால் அரசியலுக்குத்தான் வந்திருப்பார்" என்று. ஆம், அதுதான் நிகழ்ந்தது. ஜெயலலிதா, சினிமாவுக்கு வந்தது வேண்டுமானால் எதேச்சையானதாக இருக்கலாம்... விதியின் பாதை என்று சொல்லலாம். ஆனால், அவருடைய அரசியல் பிரவேசம் அவ்வாறானது இல்லை. அவருக்கு எப்போதுமே ஆழ் மனதில் அரசியல் குறித்து அலாதி விருப்பம இருந்திருக்கிறது. அதை, ஜெயலலிதாவே பின்பு ஒரு பேட்டியில் சொல்லி இருந்தார். இதோ



ஜெயலலிதா சொல்கிறார்,

"அரசியலில் தீவிரமாக இறங்கி, பெரிய அரசியல் வாதியாக வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. ஒரு வேளை, நான் சினிமாவுக்கு வராமலிருந்திருந்தால... இன்று தேர்தலுக்காக அல்லது உபதேர்தலுக்காக எங்காவது மேடையில் பேசி வெளுத்து வாங்கிக்கொண்டிருப்பேன். இப்படிச் சினிமாவுக்கு வந்து நடிப்போம் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. எல்லாம் தலைவிதி தான். ஆனால், கொஞ்சம் அதிர்ஷ்டமான தலைவிதி" என்று.

அவர் செல்லமாகக் கடிந்துகொண்ட இந்த அதிர்ஷ்டமான தலைவிதிதான், அவரின் அரசியல் பிரவேசத்தைச்சலபமாக்கப் போகிறது என்று அப்போது அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

**"நான் எம்.ஜி.ஆர். ஆகப்போகிறேன்...!"**

அம்முவாக ஜெயலலிதா பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தபோதே அவருக்கு விருப்பமான நடிகராக எம்.ஜி.ஆர். இருந்திருக்கிறார். அவருடைய படத்தைப் பார்த்துவிட்டு வந்து, அதுபோல வீட்டில் நடித்துப் பார்த்து இருக்கிறார். ஜெயலலிதாவே சொல்கிறார், "நான்பாடசாலையில்படித்துக் கொண்டிருந்த சமயம். எம்.ஜி.ஆர். நடித்த அனைத்துப்படங்களையும்நானும், என் சகோதரரும் பார்த்து விடுவோம். அந்தப் படங்களில் வரும் சண்டைக்காட்சிகள்போல. வீட்டில் ஆளுக்கொரு கம்பை எடுத்துக்கொண்டு சண்டைபோடுவோம். 'நான்தான் எம்.ஜி.ஆர்... நீதான் வீரப்பா' என்று நான் சகோதரனிடம் சொல்வேன். ஆனால், அவன் ஒப்புக்கொள்ள மாட்டான். 'நான் தான் எம்.ஜி.ஆர்... நீதான் வீரப்பா' என்பான். இதனால, எங்களுக்குள்பலத்த சண்டை வந்துவிடும். அம்மா வந்து சண்டையை விலக்குவார். சண்டையின் காரணத்தை அம்மாவிடம் சொல்வோம். உடனே அம்மா, ஒரு காசை எடுத்துச் சுண்டி மேலே போட்டு, 'பூவா... தலையா' என்று எங்களைக் கேட்டு, எங்களில் 'யார் எம்.ஜி.ஆர்... யார் வீரப்பா' என்பதைப் பற்றி முடிவுசெய்வார். பிறகும், நான் விட்டுத் தரமாட்டேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஹூம்... ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். இடத்தைப் பிடிப்பதற்கு ஆர்.எம். வீரப்பன், நெடுஞ்செழியனை மட்டும் ஓரங்கட்டவில்லை. இளம் வயதில் தன் சகோதரனையும்தான் ஓரங்கட்டி இருக்கிறார்..!

**ஜெயாவுக்காகப் படப்பிடிப்பை ரத்துசெய்த எம்.ஜி.ஆர்...!**

கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம் அல்லவா? நீண்ட போராட்டத்துக்குப்பின், ஜெயலலிதா படப்பிடிப்புத் தளத்தில். சந்தியா சொல்வது போல் நடக்கத் தொடங்கி விட்டார். மூத்த நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் வந்தால் எழுந்து வணக்கம் சொல்வது என அதன் அனைத்து விதி களையும் பழகி விட்டார். இவற்றை எல்லாம் அவர் பிடித்துச் செய்தாரா என்றெல்லாம் தெரியாது... ஆனால், இதனால் அவருக்கு கை மேல் பலன் கிடைத்தது. ஆம், அனைவரின் விருப்பமான நடிகையாக ஆகிவிட்டார். அவருக்கு படங்கள் வந்து குவியத் தொடங்கின. குறிப்பாக, எம்.ஜி.ஆர. படங்கள். அந்தச் சமயத்தில், அவர் நடித்த அனைத்துப் படங்களிலும் ஜெயலலிதாதான் கதாநாயகி.

'அடிமைப்பெண்' படப்பிடிப்பு அப்போது தார் பாலைவனத்தில் நடந்துகொண்டிருந்தது. சினிமாவுக்கென சில விதிகள் இருக்கின்றன அல்லவா....



மைனஸ் டிகிரி குளிரில் கதாநாயகர்கள் ஆடைமேல் ஆடை போட்டு நடித்துக்கொண்டிருக்கும்போது, கதாநாயகிகள் மட்டும் மெலிதான உடை அணிந்து சிரமப்பட்டு நடித்துக்கொண்டிருப்பார்கள். அந்தச் சமயத்திலும் அதுதான் நிகழ்ந்தது. ஆம், தார் பாலைவனம் மிகக் கடுமையான வெப்பம். அனைவரின் கால்களிலும் தடிமனான செருப்புகள் அணிந்திருந்த போது... அந்தக் காட்சியின் தேவை கருதி ஜெயலலிதாவுக்கு மட்டும் செருப்புத் தரவில்லை..

முதலில் ஜெயலலிதா எவ்வளவோ சமாளித்துப் பாரத்தார்.. ஆனால் நேரம் ஆக ஆக வெப்பம் கூடிக் கொண்டே போனது. அவரால் ஒரு கட்டத்துக்கு மேல் சமாளிக்க முடியவில்லை. இதை யாரிடம் சொல்ல வேண்டும் எனறும் தெரியவில்லை...? ஆனால். இதை எம்.ஜி.ஆர். பார்த்து விட்டார். எங்கே ஜெயலலிதாவின் செருப்பு என்று கொஞ்சம் கோபமாகத்தான் கேட்டிருக்கிறார். அது வாகனத்தில் இருக்கிறது என்று தெரிந்ததும், அதை எடுக்க ஒரு நபரை அனுப்பி இருக்கிறார். வாகனம் வெகு தொலைவில் இருந்ததால், சென்றவர் வரத்தாமதமாகி இருக்கிறது. கோபமடைந்த எம்.ஜி.ஆர். படப்பிடிப்பை ரத்து செய்து விட்டு. ஜெயலலிதாவை வாகனம் வரை தூக்கிச் சென்றிருக்கிறார். இதைப் பின்னர் ஒரு நிகழ்வில் நினைவுகூர்ந்த ஜெயலலிதா.. "எம்.ஜி.ஆர். திரையில் மட்டும் அல்ல, நிஜத்திலும் நாயகன் தான்...!" என்றார். அம்மா உப்பு, அம்மா மருந்தகம், அம்மா உணவகம் என நீளும் பட்டியலில்... அந்த கதாநாயகன் பெயரை ஏதாவது ஒன்றுக்காவது வைத்து இருந்திருக்கலாம்...!

(தொடரும்)

# பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

யாழ். பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத உள்ளூராட்சி மாத பரிசளிப்பு விழாவும் சென்னி சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நாளை 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபை செயலாளர் சி.சிறிபாஸ்கரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனும், சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணிப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரனும், பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலனும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும் கலந்து கொள்வர்.

சஞ்சிகை வெளியீட்டு உரையை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ. சுப்பிரமணியம் நிகழ்த்துவார். முதல் பிரதியை இலங்கை வங்கியின பருத்தித்துறை கிளை முகாமையாளர் சி.தவலிங்கம் பெற்றுக்கொள்வார். (இ-60)

# அரசியல்வாதிகள் உட்பட 35 பேருக்கு எப்.சி.ஐ.டியில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கடந்த ஒரு வருட காலமாக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு (எப்.சி.ஐ.டி.) நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் பிரபல அரசியல்வாதிகள் உட்பட 35 பேருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் 22 தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டபின் 65 விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டன எனவும், அவரது அறிவுறுத்தலின் பிரகாரம் 35 பேருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-3)

# வாவியில் வீழ்ந்த பெண் உயிரிழப்பு

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு செல்லும் வழியில் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை மட்டக்களப்பு சின்னப் பாலம் வாவியில் ஆட்டோ வீழ்ந்ததில் காப்பாற்றப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அறுவரில் குடும்பப் பெண்ணொருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்துள்ளார்.

ஏறாவூர், மீராகேணி வீதி, காட்டுமாமரத்தடி பகுதியைச் சேர்ந்த அப்துல் காதர் சரீனா (வயது-34) என்பவரே உயிரிழந்தார்.

ஆட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து 15 அடி ஆழமுள்ள வாவியினுள் குடைசாய்ந்து முற்றாக நீரில் மூழ்கியதால் ஆட்டோ சாரதி உட்பட ஆறு பேரும் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 21 07 1956 — இறப்பு 26 12 2010

அமரர்
**மார்க்கண்டு சிவலிங்கம்**
(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம்- மருதனார்மடம்)



பிறப்பு 20 03 1937 — இறப்பு 20 08 2011

அமரர்
**மார்க்கண்டு பரிமளம்**

ஆண்டுகள் ஆறு கடந்தும் ஆறவில்லை எம் துயரம்...
ஆறாத் துயரினில் எமையாழ்த்தி- உங்களை
மீளாத்துயில் கொள்ள வைத்தார்கள்!
மீண்டும் இன்னொரு ஜென்மம் பிறந்திட
ஆறுதலின்றி ஆண்டவனை வேண்டுகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (7154)

குடும்பத்தினர்.

பண்டிதர் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 934

லக்ஷனா




விதுசன்

வீட்டில உள்ள கஷ்டத்தை
தன் தலையில்
போட்டுக் வாழ்க்கையை
அனுபவிக்க வேண்டிய
வயசுல வேலைக்கு வர
பொண்ணுங்கட்ட தப்பா
நடக்காதீங்க

சங்கவி





சுவேதா




வினிதா




கம்சிகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# விரைவில் நளினியின் ஆங்கில பதிப்புப் புத்தகம்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினி எழுதிய புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்பு விரைவில் வெளியிடப்பட இருப்பதாக அவரது சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்தார்.

வேலூர் பெண்கள் சிறையில் நளினியை நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தித்துப் பேசிய பின்னர், அவர் செய்தியாளர் களிடம் கூறியதாவது,

முன் கூட்டியே விடுதலை செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்த மனு மீதான இறுதி விசாரணை 2017 ஜனவரி 19 ஆம் திகதி நடக்கிறது.

நிச்சயம் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்கு நளினி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலையும், பிரியங்கா சந்திப்பு குறித்தும் நளினி தமிழில் எழுதிய புத்தகம் அண்மையில் வெளியிடப்பட்டது.

இந்தப் புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்பு சென்னை, டில்லி, லண்டனில் விரைவில் வெளியிடப்படவுள்ளது என்றார். (இ-3)

# 4ம் மாடி மாற்றப்படவேண்டும்

## அமைச்சர் சாகல தெரிவிப்பு



கொழும்பு கோட்டையில் உள்ள குற்றப்புலனாய்வு பொலிஸாரின் நான்காம் மாடி கட்டடம் மாற்றப் படவேண்டியது அவசியம் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மக்கள் மத்தியில் நான்காம் மாடி குறித்து அச்சம் உள்ளதாக பொதுமக்கள்பாதுகாப்புத்துறை அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

4ஆம் மாடியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பொலிஸ் குற்றப் புலனாய்வுத்துறை நவீன மயப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | [illegible] | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 110 | 110 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 | 100 | 150 | 100 |
| தக்காளி | 80 | 80 | 100 | 80 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 30 | 20 | 30 | 40 | 40 | 40 |
| கரட் | 100 | 80 | 80-140 | 80 | 160 | 100 |
| பூசணி | 50 | 35 | 50 | 40 | 60 | 40 |
| புடோல் | 70 | 40 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 100 | 90 | 140 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 110 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 300 | 200 | 320 | 250 | 300 | 350 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 80 | 60 | 120 | 70 |
| கருணைக்கிழங்கு | 50 | 50 | 50 | 60 | 60 | 50 |
| பயற்றங்காய் | 120 | 150 | 200 | 120 | 160 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 50 | 60 | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 300 | 150 | 200 | 140 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 800 | 400 | 320 | — |
| போஞ்சி | 160 | 80 | 130 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 40 | 30 | 50 | 40 |
| கீரை-1பிடி | 30 | 30 | 50 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 250 | 250 | 350 | 300 | 400 | 300 |
| தேங்காய்(ஒன்று) | 30 | 20-40 | 50 | 30 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 300 | 150 | 300 | 250 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 300 | — | — | 240 | — | 200 |
| முள்ளங்கி | 80 | 40 | 60 | 40 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 35 | 15 | 30 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 15 | 20 | 15 | 20 | 25 |
| [illegible] | 60 | 50 | 80 | 60 | 100 | 60 |

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 20

"ஏம்மா சம்பவ இடத்திலிருந்த நளினியை விட்டு விட்டார்கள். நிரபராதியான என் மகனைத் தூக்கில் போடப் போகிறோம் என்கிறார்களே. என்னப்பா நியாயம் என்று என் மாமியாரும் சாந்தனின் அம்மாவும் ஊர்தோறும் பிரசாரம் செய்தால் எப்படி இருக்கும்? அரசும் அதிகாரிகளும் என்ன நினைப்பார்கள்? அந்தப் பொண்ணு குற்றவாளின்னு அவங்க ஆளுங்களே உறுதிப்படுத்துகிறார்களே? அவருக்கு தண்டனை குறைப்பு செய்து விடுவித்தால் மற்ற மூவரையும் விடுவித்தாக வேண்டுமே."



...நீதிமன்றத்தில் எங்கள் தரப்பு நியாயத்தை எடுத்துச் சொல்ல எங்களுக்கான வாய்ப்பு மறுக்கப்பட்ட நிலையில் போராடாமலேயே நிரபராதிகளான நாங்கள் குற்றவாளிகள் ஆக்கப்பட்டோம் என்ற வலி இன்றும் இருக்கின்றது. தொடர்ந்து நடந்த நெடிய சட்டப் போராட்டங்களால், என்னுடைய தூக்குத் தண்டனை மட்டும் ஆயுள் தண்டனையாகத் தமிழக அரசால் குறைக்கப்பட்டது.

ஆனால், எனக்கு அது மகிழ்ச்சியளிக்கவில்லை. என்னுடைய தண்டனைக் குறைப்பு சிலருக்கு பெரிய எரிச்சலையும் காழ்ப்பு



ணர்ச்சியையும் ஏற்படுத்திவிட்டது. "ஏம்பா, சம்பவ இடத்திலிருந்த நளினியை விட்டுவிட்டார்கள். நிரபராதியான என் மகனைத் தூக்கில் போடப்போகிறோம் என்கிறார்களே. என்னப்பா நியாயம்" என்று என் மாமியாரும் சாந்தனின் அம்மாவும் ஊர்தோறும் பிரசாரம் செய்தால் எப்படி இருக்கும்? அரசும் அதிகாரிகளும் என்ன நினைப்பார்கள்? அந்தப் பொண்ணு குற்றவாளின்னு அவங்க ஆளுங்களே உறுதிப்படுத்துகிறார்களே? அவருக்கு தண்டனை குறைப்பு செய்து விடுவித்தால் மற்ற மூவரையும் விடுவித்தாக வேண்டுமே. அது சிக்கலை ஏற்படுத்துமே என்று தானே நினைத்துக் கொள்வார்கள். அதுதானே எனக்கு நடந்தது.

ராஜீவ் கொலை நடந்த அந்தப் பொதுக்கூட்டத்துக்கு நான் அவர்களோடு சென்றிருந்ததை வைத்துத்தான் என்னை முதன்மைக் குற்றவாளியாக்கினார்கள். அதை குறிப்பிட்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவரான கெ.டி. தாமஸ், என் சந்தர்ப்ப சூழ்நிலையை தெளிவாகவே குறிப்பிட்டு, எனக்கான மரண தண்டனையை குறைத்து தீர்ப்பு எழுதினார். ஆக மூவரில் ஒருவர் என்னை நிரபராதி, சந்தர்ப்ப வசத்தால் இந்த சதியில் சிக்கினேன் என்று கூறியிருக்கின்றார். எழுவர் விடுதலை என்ற 'சிலர்' இதைப்பற்றி எல்லாம் மக்களிடம் போய் பேசவில்லை. மாறாக, அவர்கள் எழுதிக்கொண்ட புத்தகமடலில் 'எங்கள் வீட்டில்தான் சதித்திட்ட கூட்டம் நடந்தது என்ற சி.பி.ஐ யினரின் பொய்யான குற்றச்சாட்டை பதிவுசெய்து, தவறான உள்நோக்கத்தை ஏற்படுத்தினார்கள். அப்படி ஒரு கூட்டம் எங்கள் வீட்டில் நடக்கவேயில்லை என்று சாட்சிகள் மூலம் நிரூபணமான பிறகும் தொடர்ந்து புத்தகத்தின் மூலம் அந்த பிரசாரத்தை செய்து வருகிறார்கள். அதற்கு என்ன சொல்வது? என் மரணதண்டனை குறைக்கப்பட்டபோது தமிழக சட்டமன்றத்தில் விவாதம் நடந்தது. அப்போது 'நளினியின் விடுதலை எப்போது' என்ற கேள்விக்கு, "14 வருடங்கள் ஆன பிறகு நளினியின் விடுதலையைப் பற்றி பரிசீலிக்கப்படும்" என அன்றைய முதல்வர் அறிவித்தார். அது போன்ற ஒரு சூழ்நிலை கனிந்ததும் உண்மை. ஆனால் விடுதலை மட்டும் கிடைக்கவில்லை? கிணற்றில் போட்ட கல்லாக மாற்றிவிட்டார்கள்.

**சிறையில் இருந்து நளினி...**

'கடந்த 2005 ஆம் ஆண்டளவில் இந்தியன் எக்ஸ்பிரஸ் - தினமணி குழுமம் நடத்திய கருத்துக் கணிப்பில் சுமார் 70 சதவிகிதம் பேரும், குமுதம் வார இதழ் நடத்திய கருத்துக்கணிப்பில் சுமார் 80 சதவிகிதம் பேரும் என் விடுதலைக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். ஆனாலும் அரசு முன்பு எடுத்த முடிவில் இருந்து பின்வாங்கிவிட்டது. நீதிமன்றப் போராட்டங்கள் எல்லாமும் நீர்த்துப் போகச் செய்யப்பட்டன. என் விடுதலைக்கு ஆதரவாகச் செய்திகளைப் போட்டு வந்த பத்திரிகைகள் எல்லாம் தன்போக்கை மாற்றிக்கொண்டன.

மகாத்மா காந்தியின் வழக்கில ஆயுள் தண்டனைக் கைதியாக இருந்தவர் 16 வருடங்களில் விடுவிக்கப்பட்டார். அன்னை இந்திரா காந்தியின் கொலை வழக்கில் ஆயுள் கைதியாக இருந்தவர் 18 வருடங்களில் விடுவிக்கப்பட்டார். ஆனால் எனக்கு இந்தத் தடையும் முட்டுக்கட்டையும் யாரால் வந்ததென்றால் எங்களாலேயே தான் வந்தது என்பதை ஒப்புக் கொள்வதில் எந்தத் தயக்கமும் இல்லை. எழுவர் விடுதலை என பிரசாரம், எழுவர் விடுதலைக்கான ஆதரவு, எழுவர் விடுதலைக்கான நிதிதிரட்டல் என செய்து கொண்டே அதில் ஒருவரைப் பற்றி மட்டும் அவதூறு பேசினால, ஒளிபரப்பினால் என்ன அர்த்தம்? அதற்குப் பெயர் எழுவர் விடுதலையா என்ற கேள்வியை உங்கள் முன்பாகவே வைக்கின்றேன். உணர்ச்சிவசப்படாமல் நடுநிலையோடு நீங்கள் யோசிக்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

இந்த நிலையில் பிரியங்காவுடன் திடீர் சந்திப்பு நடக்கிறது. அந்த சந்திப்பு கூட நானா ஏற்படுத்திக் கொண்டதல்ல. அவராக வந்தார். யாரென்றே தெரியாமல் நான் அந்த அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

(வலிகள் தொடரும்...)

# யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி

# உயர்தொழிற்கல்விக்கான ஒரு திறவுகோல்

துரிதமாக மாறிவரும் நவீன விஞ்ஞான முன்னேற்றங்களும் அதனோடிணைந்த தொழில்நுட்ப வளர்ச்சியும் தரமான நவீன தொழில்நுட்ப திறன்கள் வாய்க்கப் பெற்ற ஊழியப் படையின் கேள்வியினை உலக தொழிற்சந்தையில் மட்டுமல்லாது உள்ளூர் மட்டத்திலும் அதிகரிக்க செய்துள்ளன.

தற்பொழுது, ஓர் ஆண்டில் பாடசாலைகளில் தரம் ஒன்றிற்கு அனுமதியாகின்ற மாணவர்கள் சராசரியாக 3இலட்சத்து 50 ஆயிரம் ஆக இருக்கின்ற அதேவேளை அதே ஆண்டில் பல்கலைக்கழக அனுமதியினை பெறுகின்ற மாணவர் எண்ணிக்கை வெறும் 25 ஆயிரம் ஆக மட்டுமே இருக்கின்றது. இதேவேளை, நாட்டில் சராசரி வருடமொன்றில் பாடசாலைகளினின்றும் விலகுகின்ற மற்றும் கற்றலில் இடை விலகுகின்ற ஏறத்தாழ 150,000 மாணவர்கள் தொழிற்திறன்கள் அற்றவர்களாக தமது ஜீவனோபாயத்தை ஆரம்பிக்கின்றனர்.

இவ்வாற நிலையில் நாட்டில் தொழில்நுட்பவியல் கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்கும் பிறிதொரு தனித்துவமான மூன்றாம் நிலை கல்விச்சாலைகளாக பல்கலைக்கழக கல்லூரிகள் (University Colleges)விளங்குகின்றன.

இப்புதிய பல்கலைக்கழக கல்லூரிகள், திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி அமைச்சின் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தினது (University of Vocational Technology)கினை நிறுவனங்களாக நாடளாவிய ரீதியில் 25 பல்கலைக்கழக கல்லூரிகள் அமைவாக்கம் பெறவுள்ளன. இவற்றில்,20 அரச பல்கலைக்கழக கல்லூரிகளின் அமைவாக்கத்தில், முதற்கட்டமாக 5 கல்லூரிகள் யாழ்ப்பாணம்,குளியாப்பிட்டி, இரத்மலானை, மாத்தறை மற்றும் அனுராதபுரத்தில் அமைவாக்கம் பெற்றுள்ளதுடன் அவற்றின் செயற்பாடுகள் 2015-ம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியில் 6 பாடப்பரப்புகளிற்கான தேசிய தொழிற்தகைமை மட்டம் (NVQ) 5 இற்குரிய டிப்ளோமா மற்றும் மட்டம் 6 இற்குரிய உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் ஆங்கில மொழிமூலம் போதிக்கப்படுகின்றன. தேசிய தொழிற்தகைமை மட்டம் ( NVQ ) 4 தகைமை அல்லது க. பொ.த. உயர்தரத்தில் சித்தியுள்ள மாணவர்கள் தமது தகைமைக்கு பொருத்தமான துறையில் தம்மை இணைத்துக்கொள்ளலாம். இது உயர்தரத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் துறையில் (Technology Stream) சித்தியடையும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய துறைசார் மாணவர்களுக்குமான வரப்பிரசாதமாகும்.

இக் கற்கை நெறிகளானது ஆரம்பத்தில் 6 மாத கால குறை நிரப்பு அடிப்படை பாடப்பரப்புகளையும் (Bridging Course) பின்னர் முறையான தேசிய தொழிற்தராதர சட்டகம் (National Vocational Qualification Framework- NVQF) என்பதற்கு அமைய ஓராண்டு உள்ளகப் பயிற்சியையும் (In-house Training) பின்னர் 6 மாத காலத்திற்கு குறையாத வேலைத் தளகளப்பயிற்சிகளையும் (On-the-Job Training- OJT) ஈற்றில் மேலும் ஓராண்டு உள்ளகப் பயிற்சியையும் கொண்டது.

இப்பல்கலைக்கழக கல்லூரியானது உயர்தர விரிவுரையாளர் குழாத்தை கொண்டிருப்பதுடன் நவீன வசதிகள் கொண்ட விரிவுரை மண்டபங்கள் மற்றும் தற்கால தொழில்நுட்பத்தில் உருவான தொழிற்சாலை இயந்திரங்களையும் கருவிகளையும் கொண்ட தொழில்நுட்பகூடங்களையும் கொண்டிருப்பதுடன்



இங்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடானது ஆசிரியர் மையமாகவோ அல்லது மாணவர் மையமாகவோ இன்றி தொழில் மையமாக (Job-oriented) அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

இப்பல்கலைக்கழக கல்லூரியானது எதிர்காலத்தில் NVQ மட்டம்7 இற்குரிய பட்டப்பாடநெறிகளை போதிக்கவும் அவற்றிற்கான பட்டச் சான்றிதழை வழங்கவும் காத்திருக்கின்றன. எனவே தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (Technical and Vocational Education and Training- TVET) துறையில் இப்பல்கலைக்கழக கல்லூரிகளின் பங்களிப்பு தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களின் மத்தியில்ஒரு மேலான அந்தஸ்தினையும் உயர்வான சமூகப்பார்வையினையும்(Social Image) பெறவுள்ளன.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியில் வழங்கப்படும் கற்கை நெறிகள்**

**1.கட்டிட சேவைகள்தொழில்நுட்பவியல்** (Building Services Technology)

இப்பாடநெறியைத் தொடர்வதன் மூலம் மாணவர்கள் பொறியியல் சாதனங்களை நிர்மாணித்தலையும் அதற்குப் பிந்தியதான சேவைகளையும் எவ்வாறு வழங்குவது என்ற அறிவினை அனுபவம் வாய்ந்தபொறியியலாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். விரிவாகப் பார்ப்பின் தீயணைப்புசாதனங்களைநிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு, தானியங்கி சாதனங்களினூடான நிர்வாக மற்றும் பொறியியல் பராமரிப்பு, கட்டிடங்களுக்கு குளிரூட்டல் சேவைகளைவழங்குதல் மற்றும் பராமரித்தல்(Air conditioning systems installation and maintenance), பாரம் தூக்கி நிறுவுதலும் பராமரித்தலும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புதிட்டத்தினைநடைமுறைப்படுத்தல் பற்றியஅறிவையும் பயிற்சிகளையும் பெற்றுக் கொள்ளமுடியும். அதுமட்டுமல்லாது திட்ட முகாமைத்துவம் பற்றியஅறிவினையும் மாணவர்கள் பெற்றுக்கொள்ளமுடியும். இதன்மூலம் எதிர்காலத்தில் பொறியியலாளர்களுடன் கை கோர்க்கும் வாய்ப்பினையும் நாளடைவில் அவர்களை அண்மித்தபதவிகளையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

**2.குடிசார்கட்டுமானத் தொழில்நுட்பவியல** (Construction Technology)

இப்பாடநெறியானதுகுடிசார் (சிவில்) பொறியில் துறையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியிருப்பதுடன் இன்றைய காலத்தினதும் முன்னோடிதொழில் நிறுவனங்களின் தேவைகளையும் கருத்திற் கொண்டுவடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதியதொழில்நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டு மாணவர்களின் தொழில் திறன்களை மெருகூட்டி உள்நாட்டில் அரச தனியார் நிறுவனங்களில் தகுதியாகவும் இலகுவாகவும் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதுடன், வெளிநாட்டில் அதிகமாக தேவைப்படும் வேலைகளுக்கு முதன்மைநிலையில் தெரிவாகும் சூழலைஉருவாக்கித் தருகின்றது.

**3.அழகுக்கலை** (Cosmetology)

இக்கற்கைநெறியானது ஒருவரின் உடல் ரீதியான ஆரோக்கியம் மற்றும் வெளித்தோற்றத்தை எவ்வாறு மெருகூட்டுவது என்பது பற்றிய அறிவினையும் பயிற்சியையும் வழங்குகிறது. உதாரணமாக கலைசார்ந்த ஊட்டம், உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி உயர்தர அல்லது மேம்பட்ட சிகைசிகிச்சைகள், உயர்தர அல்லதுமேம்பட்ட சிகை அலங்காரங்கள் உயர்தரமான அல்லது மேம் பட்ட தோற் பராமரிப்பு,கை,கால் பராமரிப்பு உயர்தர மான அல்லதுமேம்பட்ட அழகுச் சிகிச்சை போன்றவற்றை குறிப்பிடலாம். இக் கற்கைநெறியினை பயில்வதன் மூலம் அழகுக்கலைமற்றும் சிகை அலங் காரம் சார்ந்தவேலை வாய்ப்புக்களை பெறுவதுடன் சுயதொழிலையும் ஆரம்பிக்கலாம்.

**4.விவசாய இயந்திரவியற் தொழில்நுட்பவியல்** (Farm machinery technology / Agricultural machinery technology)

விவசாய இயந்திரவியற் தொழில்நுட்பக் கற்கை நெறியானது, தற்காலத்தின் விவசாயததில் செயற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களுக்கு அமைவான பாட விதானத்தை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

இக்கற்கைநெறியினைத் தொடர்வதன் மூலம் எந்திரவியல் சார்ந்த விடயங்களில் தேர்ச்சிபெறுவதுமட்டுமல்லாமல் சூழலியல் சார்ந்தவிடயங்களைப் பற்றிய அறிவையும் வளர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆக, ஒரு சிறந்த பண்ணைமுகாமையாளராக, ஆராய்ச்சியாளராக தொழில்நுட்பவியலாளராக, பயிற்றுவிப்பாளராக, அபிவிருத்தி உத்தியோகத்தராக, எதிர்காலத்தில் உங்கள் வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம் என்பதில் ஐயமில்லை.

**5. உணவுத் தொழிநுட்பம்**(Food Technology)

நவீன காலகட்டத்தில் காலத்தின் தேவைக்கேற்ப உணவு உற்பத்திக்கான தேவை அதிகரித்துச் செல்கின்றது. இதற்கு உணவுத் தொழிநுட்பத்துறையின் வளர்ச்சி முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் காரணமாக கைத்தொழிற்சாலைகளில் உணவுத் தொழிநுட்ப வல்லுனர்களான நடுத்தர மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர்களிற்கான கேள்வி அதிகரித்துள்ளது. எனவே இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்கின்ற டிப்ளோமா பட்டதாரி ஒருவர் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தரக்கட்டுப்பாட்டு முகாமையாளர், உணவுப் பகுப்பாய்வாளர், உற்பத்தி முகாமையாளர், உணவுத்தொழிநுட்ப ஆலோசகர், தரநிர்ணய அதிகாரியாகலாம்.

**6.விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை முகாமைத்துவம்** (Hospitality Management)

இக் கற்கைநெறியானது சுற்றுலாப்பயணிகள் மற்றும் சுற்றுலாத்துறைசார் துறைகளை முகாமை செய்வதுடன் தொடர்புபட்டதாகும். இக்கற்கைநெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் பின்வரும் தொழில் துறைகளில் நடுத்தர முகாமையாளராக, ஆலோசகர்களாக, மேற்பார்வையாளர்களாக தொழில் புரிவதற்கு தகுதியுடையவர்களாக காணப்படுவர். மேலும் இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் Hotel துறை, இலங்கை சுற்றுலாத்துறை, பொழுதுபோக்கும் இடங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள சர்வதேச தொழிற் சந்தைகளில் சேவையாற்றுவதற்கு தகுதியுடையவர்களாக காணப்படுவர்.

**7. மின்னணுவியல்** (Mechatronic Technology)

மேற்படிபாடநெறியானது இன்றைய நவீன யுகத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டுமிக அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கற்கைநெறியாகும். வெளிநாடுகளில் ஏற்கெனவே பிரபலமான இக் கற்கைநெறிக்கான தேவை நம் நாட்டில் இப்பொழுதுதான் உணரப்பட்டுள்ளது. இக் கற்கை நெறியானது மின்னியல், இலத்திரனியல், இயந்திரவியல், கணனிதொழில்நுட்பவியல் ஆகிய4 பிரதானமான Engineering துறைகளை இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் புதியதொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புகையிரதபாதை இயங்குகின்றது. புதியவகை Hybrid Carகள் ஓடுகின்றன, வீதி சமிக்ஞைகள் அலுவலகங்களில் Finger Print அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இயங்காமல் போனால் யார் சரிசெய்வது? இவற்றின் இயக்கத்தில் தேவைக்கேற்ப எப்படி மாற்றத்தை செய்வது? இத்தகைய வினாக்களுக்கு இந்த Mechatronicsபாடநெறியே பதிலாகும்.

**8. உற்பத்தித் தொழில்நுட்பவியல** (Production Technology/Mechanical & Manufacturing Technology)

மேற்படிபாடநெறியானதுபொறியில் சார்ந்த தொழில்நுட்பத்தையும் இயந்திரபாகங்களைவடிவமைத்தல்(Machine Design) மற்றும் தயாரித்தல் தொடர்பானநவீன தொழில் நுட்பத்தையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. மேற்படி பாடநெறியை கற்பதன் மூலம் மாணவர்கள் இன்றைய உலகிற்கான தொழில்நுட்ப அறிவினையும் நவீன இயந்திரங்களை கையாளுதலுக்கான பயிற்சியையும் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே பல்கலைக்கழக கல்லூரிகளின் வகிபாகம் ஒரு தனிமனித திறன்விருத்தியில் ஆரம்பித்து கைத்தொழிற்துறைசார் உற்பத்தி மற்றும்சேவைத்துறைகளுக்கு வேண்டிய தரமான மனித வலுவை வழங்குவதினூடாக நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கு பாரிய சேவையாற்றும் என்பது எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும். இவ் எதிர்பார்ப்பினை ஈடேற்ற நாட்டின் சகல மக்கள் தொகுதியினரும் குறிப்பாக மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இன்னும் கைத்தொழிற்துறைசார் வல்லுநர்களும் தொழில் வழங்குவோரும் தமது அளப்பரிய பங்களிப்பினை சமூகம் சார் பொது நோக்கிற்காக வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜே. ஜீ. வோல்ட்டன் தெரிவித்தார்.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,268.61 | 6,216.56 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,521.67 | 3,482.21 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 1,464.261 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** செங்கடகல (90.00), ரன்கிறின்(59.30), ரீசஸ் எனர்ஜி(22.30), ஓன்லே(55.50), முல்லர்ஸ்(1.20).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** பீப்பிள்ஸ் மேர்ச்(16.20), கபுஹஸ்ரன்(16.00), பிடிஎல்(71.90), எஸ்எம்பி லீசிங்(0.60), டேடன்ஸ்(69.30)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 148.60 | 152.37 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 181.79 | 188.05 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 154.19 | 160.16 |
| சுவிஸ் பிராங் | 143.99 | 149.75 |
| கனேடிய டொலர் | 109.46 | 113.84 |
| அவுஸ்திரேலிய டொலர் | 106.22 | 111.05 |
| சிங்கப்பூர் டொலர் | 102.16 | 105.94 |
| ஜப்பான் யென் | 1.25 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.19 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 40.64 | |


மூலம்: இலங்கை மத்திய வங்கி




# கரடியும் இரண்டு வழிப்போக்கர்களும்

ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் ராமு, மற்றொருவன் சோமு. இருவரும் இணை பிரியாத நண்பர்கள்.

ஒரு நாள் இருவரும் தேன் எடுப்பதற்காக காட்டுக்குப் பகுதிக்குச் சென்றனர். செல்லும் வழியில் ராமு சோமுவிடம், "நீ எதைபற்றியும் பயப்படாமல் என்னுடன் வா. என்னைப் போன்ற நண்பனைக் காண முடியாது. என்ன துன்பம் வந்தாலும் நான் உன்னைக் காப்பாற்றுவேன்" என்று கூறினான்.



காட்டிலுள்ள பறவைகள், மரங்கள், காட்டு விலங்குகள் போன்றவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டே இருவரும் நடந்து சென்றார்கள்.

அப்போது கரடி ஒன்று உறுமும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் அவர்கள் செல்லும் வழியிலேயே, அந்த கரடி திடீரென வந்து கொண்டிருந்தது.

கரடியைக் கண்டதும் இருவரும் பயத்தில் ஓடத் தொடங்கினார்கள். கரடியும் அவர்களைத் துரத்தியது. ஓடத் தொடங்கிய சில விநாடிகளில் மரம் ஒன்று இருப்பதை ராமு கண்டான். உடனடியாக அந்த மரத்தில் ராமு ஏறி விட்டான்.


சோமுவுக்கோ மரத்தில் ஏறத் தெரியாது என்று அறிந்திருந்தும் மரத்தில் ஏற முடியாதவனைக் கீழே விட்டு விட்டுத் தன்னை மட்டும் காத்துக்கொள்ள சுய நலத்துடன் ராமு நடந்து கொண்டான்.



சோமுவுக்கு மரம் ஏறத் தெரியாததால் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான்.

கவலையுடன் எப்படி கரடியிடமிருந்து தப்புவது என்று அவசரமாக யோசித்தான்.

இறந்தவன் போல் நடித்தால் கரடி தன்னைக் கொல்லாது என்று ஒரு யோசனை தோன்ற, பின்னர் நிலத்தில் விழுந்து மூச்சை அடக்கிக் கொண்டு இறந்தவனை போல படுத்துக் கொண்டான்.



அப்பொழுது கரடியும் அங்கு வந்து சேர்ந்தது. படுத்திருந்தவனை உண்பதற்காக அருகில் வந்த கரடி கீழே விழுந்து கிடந்தவன் காதருகே சென்று நுகர்ந்து பார்த்தது.

கரடி சோமுவை முகர்ந்து பார்த்ததை, மேலேயிருந்து பார்த்த ராமு, கரடி சோமுவிடம் ஏதோ சொல்கிறது என்று தவறுதலாக புரிந்து கொண்டான்.

பிறகு அவன் இறந்தவன் என்று முடிவு செய்து அங்கிருந்து நகர்ந்து போய் விட்டது.

கரடி செல்வதை மரத்தின் மேலிருந்து பார்த்த ராமு, கீழே இறங்கி வந்து சோமுவை எழுப்பினான். "கரடி சென்று விட்டது இனி எழும்பு நாம் தப்பி விட்டோம்" என்று ராமு கூறினான்.

சோமுவும் எழுந்து தன் யோசனை வெற்றியடைந்ததை எண்ணி நிம்மதியடைந்தான்.

கீழே படுத்திருந்தவன் எழுந்து அமர்ந்தான்.

ராமு சோமுவிடம், "கரடி உன் காதில் என்ன இரகசியம் சொன்னது?" என்ன என்று கேட்டான்.

அதற்குப் சோமு, "ஆபத்தில் உதவாத நண்பனை என்றுமே நம்பக் கூடாது! என்று சொல்லிவிட்டுப் போனது" என்றான்.

இப்பதிலால், ராமு தன் சுயநலப் புத்தியை எண்ணி நொந்து கொண்டான்.

சோமுவோ இனி மேல் எங்கள் நட்பு நீடிக்க வேண்டாம் என்று கூறிக்கொண்டு கொண்டு தனியே நடந்து சென்றான்.




- 1776 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானியர் நியூ ஜெர்சியில் இடம்பெற்ற போரில் தோற்றனர்.
- 1792 - பாரிசில் பதினாறாம் லூயி மன்னனுக்கெதிரான கடைசி விசாரணைகள் ஆரம்பமாயின.
- 1793 - கைஸ்பேர்க் என்னும் இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியர்களைத் தோற்கடித்தனர்.
- 1811 - வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரில் நாடக அரங்கில் இடம்பெற்ற தீவிபத்தில் வேர்ஜீனியாவின் ஆளுநர் ஜோர்ஜ் வில்லியம்ஸ்மித் இறந்தார்.
- 1825 - முதலாம் நிக்கலாஸ் மன்னனுக்கு எதிராக மூவாயிரத்துக்கும் அதிகமான ரஷ்ய இராணுவத்தினர் செனட் சதுக்கத்தில் திரண்டனர். இவர்களின் கிளர்ச்சி சார் மன்னனால் முறியடிக்கப்பட்டது.
- 1862 - ஐக்கிய அமெரிக்காவின் மினசோட்டாவில் 39 பேர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1870 - ஆல்ப்ஸ் மலைத்தொடருடான 12.8-கிமீ நீள தொடருந்து சுரங்கப் பாதை அமைக்கப்பட்டது.
- 1882 - யாழ்ப்பாணம், மன்னார் உட்பட இலங்கையின் பல இடங்களிலும் பலத்த மழையுடன் சூறாவளி பெரும் சேதத்தை உண்டுபண்ணின.
- 1898 - ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1925 - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1925 - துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.
- 1933 - பண்பலை வானொலி காப்புரிமம் பெறப்பட்டது.
- 1944 - ஆங் சான் பர்மாவின் நவீன இராணுவத்தை உருவாக்கினார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: நோர்வேயில் ஜேர்மனிய போர்க்கப்பல் ஷார்ன்ஹோஸ்ட் பிரித்தானியக் கடற்படையினால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது.
- 1948 - கடைசி சோவியத் இராணுவம் வட கொரியாவில் இருந்து விலகியது.
- 1973 - சோவியத்தின் சோயுஸ் 13 விண்கலம் ஒரு வார பயணத்தின் பின் பூமி திரும்பியது.
- 1974 - சோவியத்தின் சல்யூட் 4 விண்கலம் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1976 - நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) அமைக்கப்பட்டது.
- 1979 - சோவியத் விசேட படையினர் ஆப்கானிஸ்தானின் அதிபர் மாளிகையைக் கைப்பற்றினர்.
- 1985 - கொரில்லா பற்றி ஆய்வுகள் நடத்திய அமெரிக்கப் பெண் டயான் ஃபொசி கொல்லப்பட்டார்.
- 1986 - உலக மக்கள்தொகை 5 பில்லியனை எட்டியது (www.ibiblio.org).
- 1991 - சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.
- 1998 - அயர்லாந்து, வடக்கு இங்கிலாந்து மற்றும் தெற்கு ஸ்கொட்லாந்தில் இடம்பெற்ற புயலால் பலத்த சேதம் ஏற்பட்டது.
- 2003 - தென்கிழக்கு ஈரானில் பாம் நகரில் ஏற்பட்ட 6.6 ரிக்டர் நிலநடுக்கத்தால் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டனர்.
- 2004 - இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட 9.3 ரிக்டர் அளவு நிலநடுக்கம், சுனாமி ஆழிப்பேரலையை ஏற்படுத்தி இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, மாலைதீவுகள் ஆகிய நாடுகளில் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. 300,000 பேருக்கு மேல் இறந்தனர்.
- 2006 - சதாம் உசேனின் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டு மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது.

பிறப்புகள்

- 1791 - சார்ள்ஸ் பாபேஜ், ஆங்கிலேய கணிதவியலாளர் (இ. 1871)
- 1880 - எல்ரன் மாயோ, அவுஸ்திரேலிய உளவியலாளர் (இ. 1949)
- 1893 - மா சே துங் சீன மக்கள் குடியரசின் முதல் தலைவர், பொதுவுடைமைவாதி (இ. 1976)
- 1925 - இரா. நல்லகண்ணு, இந்தியப் பொதுவுடைமைத் தலைவர்

இறப்புகள்

- 1530 - ஸாகிருதீன் பாபர், இந்தியாவில் முகலாய வம்சத்தை உருவாக்கியவன் (பி. 1483)
- 1972 - ஹரி ட்ரூமன், 33வது அமெரிக்காவின் 33வது அதிபர் (பி. 1884)
- 1999 - சங்கர் தயாள் சர்மா, முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் (பி. 1918)
- 1981 - சாவித்திரி, தென்னிந்தியத் தமிழ்த் திரைப்பட நடிகை
- 1985 - டயான் ஃபொசி, கொரில்லாவைப் பற்றி ஆய்வுகள் நடத்திய அமெரிக்கப் பெண் (பி. 1932)
- 2006 - ஜெரால்ட் ஃபோர்ட், ஐக்கிய அமெரிக்காவின் 38வது ஜனாதிபதி (பி. 1913)

புயல் அடிக்கும் போது இறைவனை உணர்வதை விட குளிர்ந்த காற்று வீசும் போது அதன் சக்தியை அறிய வேண்டும். - யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இயற்கை அன்னையே உன் இதயம் நெகிழவில்லையோ?

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் நாள் எவரும் எதிர்பாராத அந்தப் பேரழிவு நடந்து முடிந்தது.

சுனாமி எனும் ஆழிப்பேரலை மனித உறவுகளை காவுகொண்ட நாள் அது. அமைதியாக; அடக்கமாக இருந்த கடல் அன்னை ஏனோ தெரியவில்லை, பெரும் கோபம் கொண்டவளாக எவராலும் கட்டுப்படுத்த முடியாத பேரலையாக எழுந்து மனித உறவுகளை தனக்கு ஆகுதியாக்கினாள்.

இன்று 12 ஆண்டுகள் நிறைவாகிவிட்ட ஆழிப்பேரலை, எழுந்தது ஒருகணம் ஆயினும் இன்றுவரை அந்த அழிவின் வேதனை கண்ணீராய் கரைந்து ஓடுகிறது.

ஏன்தான் இப்படி என்ற வேதனையின் மத்தியில் இயற்கையை இறைவனாக வணங்கி வழிபட்ட எங்கள் ஆதிச் சமூகத்தின் பண்பாடுபற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆதிகாலத்து மனிதன் சூரியனை, சந்திரனை, நதியை, ஆற்றை, சமுத்திரத்தை, மண்ணை, மரத்தை, ஆகாய வெளியை, வாயுவை கடவுளாகப் போற்றி வணங்கினான். இயற்கையே நமக்கான வாழ்வு என்பதை நம் மூதாதையர்கள் முழுமையாக நம்பியிருந்தனர். அதிலும் குறிப்பாக தமிழ்ச் சமூகம் இயற்கையை வழிபடுவதில் அதீத கவனம் செலுத்தியது.

சூரியனை வழிபாடு செய்ய சூரியப் பொங்கல் செய்யப்பட்டது. வாயுவை வழிபாடு செய்தல், சந்திரனை வணங்குதல், மரத்தை, கடலை வழிபாடு செய்வது என்பது எங்கள் வழிபாட்டு மரபாக அமைந்திருந்தது.

பிதிர்க்கடன் தீர்த்தல் என்ற அபரக்கிரியை நீர்நிலைகளிலேயே இடம்பெற்றன. இவ்வாறாக இயற்கையை கடவுளாக வழிபட்டவர்கள், இயற்கையை பாதுகாப்பதிலும் அதனை பேணுவதிலும் ஆர்வம் காட்டினர்.

இருந்தும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களும் அணுவாயுதப் பரிசோதனைகளும் இறைவன் தந்த இயற்கையை பதம் பார்ப்பனவாக மாறின.

இதன் விளைவாக கடல் அன்னை சீற்றம் கொண்டாள். அந்தச் சீற்றத்தால் ஏதும் அறியாத அப்பாவிகள் பலியாகிப் போயினர். அந்தக் கொடூரம் நடந்து இன்று 12ஆண்டுகள் நிறைவாகின்றன.

ஆழிப்பேரலையில் உயிரிழந்த அத்தனை உறவுகளுக்குமாக நாம் அனைவரும் ஒருகணம் அஞ்சலி செலுத்துவோம். அதேவேளை இறைவனாக நாம் வழிபட்ட இயற்கையை போற்றிப் பாதுகாக்க திடசங்கற்பம் கொள்வோம்.

இயற்கை என்பது நம் வாழ்வுக்கு இறைவன் தந்த இருப்பிடம். அந்த இருப்பிடத்தில் இருந்து கொண்டு அதனைச் சேதப்படுத்துவதும், அதனைக் கோபப்படுத்துவதுமான செயல்கள் நடந்தேறுகின்றன.

இதனால் இயற்கை அனர்த்தம் என்பது அடிக்கடி ஏற்படலாயிற்று. இத்தகைய அனர்த்தங்கள் அனைத்தும் மனித வாழ்வை சிதைப்பதாகவும் மனித சமூகத்துக்கு தீராத்துன்பத்தை தருவதாகவும் அமைவதைக் காணமுடிகின்றது.

எனவே நாம் வாழும் இயற்கையை பராமரிக்க தவறுவோமாயின் அதன் ஒவ்வொரு கட்டத்திலும் பாரிய சவால்களை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆகையால் இயற்கையைப் பாதுகாப்போம் என அத்தனை பேரும் ஒற்றுமையாக ஒருங்கிணைந்து சத்தியம் செய்வோம். அந்தச் சத்தியத்தை வழுவாது காண்பிப்போம். இந்த உறுதி ஆழிப்பேரலை நடந்த 12ஆண்டுகள் நிறைவடைகின்ற இன்றைய நாளில் எடுத்துக் கொள்வோம்.

இந்த உறுதி ஆழிப்பேரலையில் ஆகுதியான எங்கள் உறவுகளுக்கான மிகப்பெரும் காணிக்கையாக இருக்கும்.

# வறுமையில் தமிழர் பிரதேசங்கள் முன்னிலை

(கொழும்பு)

அண்மையில் தொகை மதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை படம், பிரதேச செயலகங்களின் நிர்வாக எல்லைகளின் அடிப்படையில் இலங்கையின் வறுமை நிலையினை எடுத்து காட்டுகிறது.

2002ஆம் ஆண்டு நடந்த தொகை மதிப்பு மற்றும் வீட்டு துறையினரின் வருமானம் செலவு மதிப்பீட்டின் (HIES) படியும் நூற்றுக்கு 22.7 வீதமாக இருந்த வறுமை கோட்டின் கீழ் உள்ளவர் வீதம் 2012/13 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொகை மதிப்பின் படி 6.1 வீத மாக குறைவடைந்து உள்ள போதிலும், வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் வறுமையின் கீழ் அவதிப்படும் மக்களின் அளவு அதிகமாகவே உள்ளது.

முல்லைத்தீவு(28%), மொனராகலை(21%), மன்னார்(20%), மட்டக்களப்பு (19%), கிளிநொச்சி (13%) ஆகிய மாவட்டங்களே அதிகம் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களை கொண்ட மாவட்டங்களாக பதிவாகியுள்ளது.

வடக்கு கிழக்கில் உள்ள போருக்கு பின்னரான தமிழர் பிரதேசங்களிலேயே வறுமை அதிகமாய் உள்ளது.

பிரதேச செயலகங்கள் வாரியான வறுமை கோட்டின் கீழ் உள்ளோர் வீதம் (2012/13)

தரவு மூலம் : தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்

வட கிழக்கை தவிர மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் முன்னேற்றம் 2002க்கும், 2012/13 க்கும் இடையில் மற்ற எல்லா இடங்களிலும் வறுமை கோட்டின் கீழ் உள்ளோர் சதவீதம் முன்னேற்றம் கண்டுள்ளது.

முன்னைய காலங்களில் இலங்கையின் வறுமைப்பட்ட மாகாணமாக கருதப்பட அம்பாந்தோட்டையில் 2002இல் 32 வீதமாக இருந்த வறுமை கோட்டின் கீழ் உள்ளோர் வீதம் 2012/13 தரவுகளின் அடிப்படையில் வெறும் 4.9 வீதமாகவே காணப்படுகின்றது.

2002 இல் யுத்த சூழ்நிலை காரணமாக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் சனத்தொகை மதிப்பு இடம்பெறவில்லை.

அதனால் அப்போது வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நிலவிய வறுமை மட்டத்தினை அளவிட முடியாது உள்ளது.

ஆனால் கடைசியாக நடந்த தொகை மதிப்பின் அடிப் படையில் வறுமை தொடர்பான தரவுகள் வடக்கு கிழக்கில் அதிகமாக இருப்பது பிரதேச ரீதியாக செய்ய வேண்டிய வறுமை ஒழிப்பு திட்டத்தின் தேவையை காட்டிநிற்கிறது.

மேல் உள்ள வரைபின் அடிப்படையில் வறுமை மட்டம் அதிகமாகவுள்ள பிரதேச செயலக பிரிவுகள்

மண்முனை மேற்கு - மட்டக்களப்பு மாவட்டம் - 45.1வீதம்

கோறளைப்பற்று - தெற்கு - மட்டக்களப்பு மாவட்டம் - 37.7வீதம்.

புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு மாவட்டம் - 35.7வீதம்

துணுக்காய் - முல்லைத்தீவு மாவட்டம் - 34வீதம்

மாந்தை கிழக்கு - முல்லைத்தீவு மாவட்டம் - 34வீதம்

ஒட்டுசுட்டான் - முல்லைத்தீவு மாவட்டம் - 33வீதம்

மண்முனை தென்மேற்கு - மட்டக்களப்பு மாவட்டம் - 30.1வீதம் (இ-3)

## மின்னிணைப்பு ஆரம்பித்தலும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று

நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையத்திற்கான மின்னிணைப்பு ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் 2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை கௌரவித்தலும் இன்று 26 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலையத்தலைவர் க.தர்மலிங்கம் (ஜே.வி) தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் யூ.ஜெலீபன், யாழ்.மாவட்ட தமிழரசுக் கட்சியின் நிர்வாக செயலாளர் எஸ்.எக்ஸ் குலநாயகம், வலி.கிழக்கு ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் க.சிவலிங்கம், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் து.அருள்ராஜ், நீர்வேலி தெற்கு கிராம சேவையாளர் சி.தயாபரன், நீர்வேலி மேற்கு கிராம சேவையாளர் சு.சண்முகவடிவேல், யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் திருமதி. வாகீசன், சாந்தி சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் து.இளமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## கற்கை நெறிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் புதிய கல்வியாண்டு 2017 ஆம் ஆண்டுக்கான பின்வரும் டிப்ளோமாதர (NVQ Level -5 & 6) கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 13.01. 2017 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர். மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் சான்றிதழ் தர கற்கை நெறிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் 27.12.2016 தொடக்கம் நடைபெறும்.

1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (முழுநேரம்/பகுதி நேரம்)

2. தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல் டிப்ளோமா (முழுநேரம் /பகுதி நேரம்)

3. நிர்மாண தொழில் நுட்பவியல் டிப்ளோமா (முழுநேரம்/பகுதி நேரம்)

4. கணிய அளவையியல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (முழுநேரம் /பகுதி நேரம்)

5. மோட்டார்வாகன தொழில் நுட்பவியல் டிப்ளோமா (முழுநேரம் /பகுதி நேரம்)

6. தேசிய கணக்கீட்டு டிப்ளோமா முழு நேரம்


7. ஆங்கில மற்றும் கல்வியியல் டிப்ளோமா முழு நேரம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## காரைநகர் பிரதேச கலாசாரப் பெருவிழா

காரைநகர் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும், கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் 2016ஆம் ஆண்டுக்கான கலாசாரப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். இக் கலாசாரப் பெருவிழாவின் சிறப்பு நிகழ்வுகளாக "கலங்கரை 2016" இதழ் வெளியீடும், காரைநகரின் மூத்த கலைஞர்களுக்கான "கலைஞானச்சுடர் விருதுவழங்கிக்கௌரவித்தலும் இடம்பெறும்.

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்நிகழ்வானது காரைநகர் பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபை ஆகியவற்றின் தலைவருமான திருமதி தேவந்தினி பாபுவின் தலைமையில் இடம் பெறவுள்ளதுடன் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தின் உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-3)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை



### தெய்வீக நீதி

அறிவை வைத்துக் கொண்டு ஒருவர், இந்தப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு இயக்கத்தில் உள்ள ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்து அப்படி ஆராய்வதன் மூலமாக வலி, நோய்கள், பிணக்குகள், வாழ்க்கைச் சிக்கல்கள் மற்றும் குழப்பங்களைத் தவிர்த்து, அமைதியோடும், பேரின்பத்தோடும் வாழக்கூடிய உயர் வாழ்க்கையைப் பெற முடியும். உலகத்தில் உள்ள சடப்பொருட்களும் சரி, உயிரினங்களும் சரி, எதுவானாலும் அவற்றோடு தொடர்பு கொள்ளுகிற போது ஒரு இணக்கமான, அளவு முறைக்கு உட்பட்ட வகையில் விழிப்பு நிலையோடு செயற்பட முடியும்.

பிரபஞ்சத்தில் உள்ள எதுவானாலும், உயிரினமானாலும் அல்லது வேறு இரசாயனக் கூட்டுப் பொருளானாலும், அது பரிணாம வளர்ச்சி நியதிப்படி, ஆதிநிலையிலிருந்து தற்போதைய நிலை வரை தொடர்ந்து ஜீவகாந்தத் தன்மாற்றத்தின் குண இயல்புகளோடு தான் அமைந்திருக்கிறது. எந்த ஒரு உயிரினத்துடனோ அல்லது சடப்பொருளுடனோ தொடர்பு கொள்ளும்போது ஒருவர் உருவம், நிறம், குணமாக அதனதன் தன்மையை அடைந்து தன்னுடைய சீவகாந்தத்தின் தன் மாற்றத்தையே எண்ணமாகவும், சொல்லாகவும், செயலாகவும் செலவிடுகிறார்.

அவருக்கும் அவர் தொடர்பு கொள்ளுகிற பொருளுக்கும் இடையே நடைபெறுகிற அலை இயக்கம் மோதுதல், பிரதிபலித்தல் என்கிற தன்மைகளோடு, அவரையும் அவர் தொடர்பு கொள்ளுகிற பொருளையும் ஒருவிதமான பாதிப்புக்கு உள்ளாக்கி அதற்கேற்ற விளைவுகளைத் தருகிறது. இந்த விளைவுகள் எந்தக் காரணத்தைக் கொண்டும், தொடர்பு கொள்ளுகிறவருடைய இயற்கையான தன்மையையோ அல்லது தொடர்பு கொள்ளப்படுகிற பொருள் அல்லது நபரின் இயற்கையான நன்மையையோ பாதிக்கக் கூடாது. அதாவது எந்தப் பொருளோடு தொடர்பு கொண்டாலும் புலன் மயக்கில் அதனோடு சிக்கிக் கொள்ளக் கூடாது. ஆன்மீக அறிவு பெற்ற ஒருவர் இதைத் தெய்வநீதியாகவும், வாழ்க்கை ஒழுக்கமாகவும் கொள்ள வேண்டும்.

# அரையிறுதியில் யங்கென்றீஸ்




ஞானமுருகன் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் தொடரில் நடைபெற்ற காலிறுதியில் யங்கென்றீசியன் மற்றும் நாவாந்துறை சென் மேரிஸ் அணிகள் மோதின.

ஆட்ட நேர முடிவில் போட்டி 2-2 என்ற கோல்கணக்கில் சமனிலையானதால் சமனிலை தவிர்ப்பு உதை முடிவில் இளவாலை யங் கென்றீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

யங்கென்றீசியன் அணியின் கோல்காப்பாளர் பணி போட்டி முழுவதும் சிறப்பாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# இன்றைய போட்டிகள்

மாமனிதர் குமார் பொன்னம்பலம் வெற்றிக் கிண்ணத்திற்கான பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை நடை பெறும் போட்டியில் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் (B) விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து நடைபெறும் போட்டியில் சென் அன்ரனிஸ் (B)விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொலிகை ஸ்மாட் போய்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இரவு 7.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் கலைமதி (B)விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் தோப்பு கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாரதி நாயன்மார்கட்டு விளையாட்டுக் கழகமும் இரவு 8.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சங்கானை இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# பருத்தித்துறை ஐக்கிய வி.கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப்போட்டி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் திக்கமுனை மைதானத்தில் விலகல் முறையில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித்தொடர்நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகியது. இப்போட்டித் தொடர்-"அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்" ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி என சிறப்பாக பெயரிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கழகத்திற்கு 07 வீரர்கள் பங்குபற்றும் இப்போட்டித் தொடரில் மொத்தமாக 41 கழகங்களும் போட்டியிடுகின்றன.

மாலை 5.20 மணிக்கு ஆரம்பமாகிய இரண்டவாது போட்டியில் பொலிகை பாரதி வி.கழக அணி, கலட்டி ஐக்கியம் வி.கழக அணியை எதிர் கொண்டது. இப்போட்டியின் பிரதான நடுவராக எஸ். வேணுகீதனும் உதவி நடுவர்களாக எஸ் கபில் மற்றும் பி. சுதாகரும் நான்காவது நடுவராக ம.பிரான்சிஸ்க்கும் செயற்பட்டனர்.

இரண்டும் சமமான பலம் கொண்ட அணிகள் என்பதால் விறுவிறுப்பக்கு பஞ்சமில்லாது ஆரம்பித்த போட்டியில் இரு அணிகளும் தமக்குரிய முதலாவது கோலைப் போட்டுக் கொள்ள பலத்த முயற்சிகளை எடுத்த வண்ணம் இருந்தன.

இந்த முயற்சியின் பலனாக 5 ஆவது நிமிடத்தில் பொலிகை பாரதி வி.கழக அணியின் முன்கள 07 இலக்க -வீரர் த.றொபின்சன் தனது அணிக்காக மிக நுட்பமான முறையில் எதிர் அணியின் பலத்த தற்காப்பாளர்களை ஏமாற்றி ஒரு கோலை அடித்து தனது அணியை முன்னிலைப்படுத்தினார்.

இருப்பினும் கலட்டி ஐக்கியம் வி.கழக அணிதாம் சளைத்தவர்கள் அல்ல என்று போராடி 10 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் முன்கள 10-ஆம் இலக்க வீரர் ம. சதீஸ்கரன் தனது அணிக்காக எதிர் அணியின் பலத்த தற்காப்பு வீரர்களையும் கோல் காப்பாளரையும் வெட்டி சென்று சாதுரியமாக ஒருகோலைப் போட்டு சமப்படுத்தினார். தொடர்ந்தும் இரு அணிகளும் கோல் அடிக்கும் முனைப்புடன் விளையாட்டை வேகப்படுத்தின. ஆனாலும் கோல் போடும் முயற்சிகள் அனைத்தும் வீணாக்கப்பட்டன. இதனால் இரு அணிகளின் சமநிலை கோல்களுடன் 5.42 மணிக்கு முதல் பாதிஆட்டம் முடிவுக்குவந்தது.

5.47 மணிக்கு ஆரம்பித்த இரண்டாம் பாதி ஆட்டததில் பொலிகை பாரதி வி.கழக அணி தமது விளையாட்டை மிக வேகப்படுத்தினர். தொடர்ந்து எதிரணியின் கோல் பிராந்தியத்தை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தன. இதனால் 26 ஆவது நிமிடத்தில் முன்கள 7 இலக்க வீரர் த.றொபின்சன் மீண்டும் தனது அணிக்காக ஒரு கோலை அடித்து தனது அணியை முன்னிலை பெறச் செய்தார்.

தொடர்ந்தும் பொலிகை பாரதி வி.கழக அணியின் முன்கள வீரர் மிக சாதுரியமாக எதிரணியின் தற்காப்பு வீரர்களை வெட்டி சென்று முன்னேறி கோல்காப்பாளரையும் வெட்டிகோலடிக்க முனைகையில் கோல்காப்பாளர் அவரை தள்ளி விழுத்தினார்.இதனால் அவர் வேணடும் என்றே தள்ளி விழுத்தினார் என்று நடுவரால் மஞ்சல் அட்டை காட்டப்பட்டு எச்சரிக்கப்பட்டார். இதனால் தமக்குகிடைத்த தண்ட உதையை சரியாகப்பயன்படுத்திய பொலிகை பாரதி அணியின் 8 ஆம் இலக்கவீரர் சு. நிதர்சன் 29 ஆவது நிமிடத்தில் தனது அணிக்காக ஒரு கோலைப் போட்டு முன்னிலைபடுத்தினார்.

கலட்டி ஐக்கியம் வி.கழக அணி தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தது. இதனால் 33 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் முன்கள 14ஆம் இலக்கவீரர் சஜீவன் தனது அணிக்காக எதிர் அணியின் பலத்த தற்காப்பு வீரர்களை உடைத்து சாதுரியமாக ஒரு கோலை அடித்தார்.

பின்னர் எப்படியாவது ஒரு கோலை போட்டு போட்டியை சமப்படுத்த வேண்டும் என்ற முனைப்புடன் வீறு கொண்டு கலட்டி ஐக்கிய வி.கழக அணியினர் முன்னேறித்தாக்குதல் ஆட்டத்தை கையாண்டனர். ஆனால் எதிர் அணியின் தற்காப்பு வியூகத்தை உடைத்து அவர்களால் எந்தவித கோல்களையும் அடிக்கமுடியவில்லை.



## பொலிகை பாரதி வெற்றி

இறுதியாக போட்டி 6.08 மணிக்கு முடிவுக்கு வரும் போது பொலிகை பாரதி வி.கழக அணி 3 கோல்களை போட்டு வெற்றி பெற்று தொடரில் தனது இடத்தை தக்க வைத்துக் கொள்ள கலட்டி ஐக்கியம் வி.கழக அணி 2 கோல்களை மட்டும் அடித்ததனால் தோல்வியுற்று தொடரிலிருந்து வெளியேறியது

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பொலிகை பாரதி வி.கழக அணியின் முன்கள 7 இலக்க வீரர் த. றொபின்சன தெரிவுசெய்யப்பட்டார். (க)



யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தால் நேற்று முன்தினம் நடந்த கோலூன்றிப் பாய்தலில் தேசிய சாதனை படைத்த அனித்தாவின் கௌரவிப்பு விழாவின் போது ....

# சென்.நீக்கீலஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்



அல்வாய் மனோரகா விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் 23.12.2016 அன்று நடைபெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்நீக்கிலஸ்அணியை எதிர்த்து வல்வை ஆதிசக்தி அணி மோதியது.

மிகவும் எதிர்பார்ப்புடன் நடைபெற்றஆட்டத்தில்தொடக்க நேரம் முதலே நீக்கிலஸ் அணி ஆதிக்கத்தை செலுத்தியது. இருப்பினும் மிகவும் ஆக்ரோசமாக ஆதிசக்தி அணியினர் தடுத்து ஆடினர்.எனினும் மிகவும் நுட்பமாக ஆடிய நீக்கிலஸ் அணியின் முன்கழ வீரர் றோசாய் 24 ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த பந்தினை கோலாக்கி அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார்.

தொடர்ந்து இடைவேளையின் போது ஆட்டம் 01 .00 என நிறைவு பெற இரண்டாவது பாதியாட்டத்தின் ஆரம்பத்திலேயே நீக்கிலஸ் அணி வீரர் றோசன் 27 ஆவது நிமிடத்தில் ஒரு கோலினை போட்டு தமது அணியின் வெற்றியினை நிலைநிறுத்தினார்.

இருப்பினும் தொடர்ந்து போராடிய ஆதிசக்தி அணியினரால் எந்தவிதகோலினையும்போடமுடியவில்லை. ஆட்டநேர நிறைவில் சென்நீக்கிலஸ் அணியினர் 02.00 என்ற கோல்ணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றனர். (க)

# யாழ்.இந்துக் கல்லூரியை இனிங்ஸால் வென்றது தெல்லிப்பழை மகாஜனா

19 வயது கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியை இனிங்ஸ் மற்றும் 20 ஓட்டங்களால் வென்று வரலாறு படைத்துள்ளது மகாஜனாக் கல்லூரி.

இப்போட்டி 23, 24 ஆம் திகதிகளில்மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில்வெற்றி பெற்ற யாழ். இந்து முதலில் துடுப்பெடுத்தாடி 29.5 பந்துப்பரிமாற்றங்களே தாக்குப் பிடித்து சகல இலக்குகளையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. துவாரகன் 38, நிகேஸ் 30, சந்தோஸ் 22 ஓட்டங்களை பெற்றனர்.

மகாஜனா சார்பில் பந்து வீச்சில் ஜசிந்தன் 6 இலக்குகளையும் தயுஸ்ரன் 3 இலக்குகளையும் சாய்த்தனர்.

பதிலளித்து முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மகாஜனா 75 பந்துப் பரிமாற்றங்களை எதிர்கொண்டு சகல இலக்குகளையும் இழந்து 328 ஓட்டங்களை குவித்தது. சுஜீபன் 69, சர்மிலன் 66, கிருஷன்-64, பிரணவன் 30, சாருஜன் 30 என ஓட்டங்களைக் குவித்தனர்.

167 ஓட்டங்கள் முதலாம் இனிங்ஸில் பின்தங்கிய நிலையில் இரண்டாம் இனிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ். இந்து 40.3 பந்துப் பரிமாற்றங்களை எதிர்கொண்டு 147 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து இனிங்ஸ் மற்றும் 20 ஓட்டங்களால் பாரிய தோல்வியை சந்தித்தது. இந்து சார்பாக இரண்டாம் இனிங்ஸில் கஜநாத் 32, சந்தோஸ் 33 ஓட்டங்களைப் பெற்றனர். மகாஜனா சார்பாக இரண்டாம் இனிங்ஸ் பந்துவீச்சில் தயுஸ்ரன் 6 இலக்குகளையும் சாருஜன் 2 இலக்குகளையும் சாய்த்தனர். (க)

## ஜோசப் பரராஜ...

தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.ஜோன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஈகச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தபட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், சா.வியாளேந்திரன், கே.கோடீஸ்வரன், மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கோ.கருணாகரன், பி.இந்திரகுமார், மா.நடராசா, ஞா.கிருஸ்ணபிள்ளை, த.கலையரசன் உள்ளிட்ட கட்சியின பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். இந்த நிகழ்வில் நினைவுபேருரை ஆற்றிய மாவை சேனாதிராஜா,

தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள், எங்களோடு கூடவே இருந்து வழிகாட்டியாகவும் தலைவனாகவும், போராளியாகவும் நண்பனாகவும் இருந்த ஜோசப் பரராஜசிங்கம் பிரார்த்தனை ஒப்புக் கொடுக்கின்ற புனிதமான தினத்திலே -நேரத்திலே அவர் கொல்லப்பட்டார்.

அழிக்கப்பட்ட தினத்திலும் மக்கள் பீனிக்ஸ் பறவைகள் போல எழுந்து நிற்கிறார்கள் என்ன இலட்சியத்துக்காக இலட்சக் கணக்கான உயிர்கள் பலி கொடுக்கப்பட்டனவோ அந்த ஆத்மாக்களுடைய பலம் எங்களுக்கு எப்போதும் இருந்து கொண்டேயிருக்கிறது.

எந்த இலட்சியத்துக்காக போராடினார்களோ அதற்காக நாங்கள் மீண்டும் எழுந்து கொண்டிருக்கின்றோம். என்னைப் பொறுத்தவரையில் நானும் 3 முறை இறந்து விட்டேன என்று தூக்கி வீசப்பட்டவன்தான்.

அண்மையிலே நாரந்தனை வழக்கு 14 ஆண்டுகளுக்குப் பிறகு. குற்றவாளிகளு க்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் இறந்து விட்டோம் என்று தான் மருத்துவமனைக்குக் கொண்டு வந்தார்கள்.

நாலாம் மாடியிலே நான் மூர்ச்சித்து வீழ்ந்த பொழுது மரணித்து விட்டேன் என்று கூறிவிட்டார்கள். மூன்றாவதாக ஆனையிறவு இராணுவ முகாமிலும் நான் மரணித்து விட்டேன் என்று தூக்கி வீசப்பட்டேன். இவை சிறிய சம்பவங்கள்தான்.

எங்களுடைய மக்கள் தங்களுடைய உயிர்களைப் பலி கொடுத்து இத்தனை ஆண்டுகளாக இனத்தின் விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்த சூழலோடு ஒப்பிடுகின்ற பொழுது என்னுடைய உயிர் மீண்டும் தப்பியிருக்கக் கூடியது பெரிய அர்ப்பணம் என்று கூற வரவில்லை.

தமிழர் தாயகத்தின் அழகான மண்ணிலே நாம் ஆக்கிரமிக்கப்பட்டவர்களாக அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக இருப்பதற்கு எதிராக தந்தை செல்வாவோடு, அமிர்தலிங்கத்தோடு தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு தன்னை இளவயதிலிருந்து இணைத்துக் கொண்டு போராட்டங்களிலும் மகாநாடுகளிலும் கலந்து கொண்டு தீர்மானங்கள் எடுப்பதிலெல்லாம் பங்குபற்றி வந்தவர்தான் ஜோசப் பரராஜசிங்கம்.

எங்களோடு உழைத்த பலர் இப்பொழுது எம்மிடையே இல்லை. இலட்சியத்துக்கா இனத்தின் விடுதலைக்காக ஜனநாயகத்துக்காக எமது இளைஞர் சமுதாயம் இந்த மண்ணிலே இருந்து வந்திருக்கின்றது.

ஜோசப் பரராஜசிங்கம் மனித உரிமைகளுக்காக இராணுவ, அரச படுகொலைகளுக்கு எதிராக நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குரல் கொடுத்தார். பல நாடுகளுக்குச் சென்று பல தூதர்களிடம் குரல் கொடுத்திருக்கின்றார்.

கட்சியின் ஏகோபித்த தீர்மானத்தில் ஒன்றுபட்டுழைத்தவர். கட்சியின் பண்பைக் கட்டிக் காத்தவர். தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் நம்முடைய இனத்தின் விடுதலைக்காக உழைத்தவர்.

குற்றவாளிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட அவரின் வழக்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு எடுக்கப்பட்டிருக்கின்றது. தனித்தனியாக, கூட்டமாக எமது மக்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்குகளின் இலங்கை அரசாங்கத்தின் தீர்ப்புக்களின் மீது நாங்கள் திருப்தி கொள்ளவில்லை.

அதனால் இன்னமும் நாங்கள் கவலையடைந்திருக்கின்றோம். பழைய தீர்ப்புக்கள் இலங்கையின் நீதித்துறையை கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது. இரத்தத்தில் இந்த மக்களின் உணர்வு இன்னமும் அதிகரித்துக் கொண்டுதானிருக்கின்றது.

கடந்த 2005 ஆம் ஆண்டு நத்தார் தினத்தன்று மட்டக்களப்பு புளியந்தீவு தேவாலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர்களினால் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டு படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (11)

## நத்தார் கொண்...

டம் இடம்பெற்றிருந்த வேளை அங்கு வாள், கத்தி மற்றும் கொட்டன்களுடன் வந்த ஆயுததாரிகளே சரமாரியான வாள் வீச்சை அங்கு நின்றிருந்தவர்கள் மீது நடத்தியிருந்தனர்.

இதில் முதலில் பிரநீத், வின்சன் ஆகியோர் வாள்வெட்டுக்கு இலக்காகி இரத்தம் சிந்தியபடி கிடந்துள்ளனர். இதன்போது அவர்களை காப்பாற்ற முற்பட்ட ஆட்டோச்சாரதி மீதும் வாள்வெட்டு நிகழ்த்தப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் அங்கு நின்று அடாவடியில் ஈடுபட்டிருந்த ஆயுததாரிகள் பின்னர் மோட்டார் சைக்கிள்களில் ஏறி தப்பிச்சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் அப்பகுதியில் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ள நிலையில் குற்றவாளிகளை கைது செய்யும் முயற்சியினை பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் நேற்றிரவுவரை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலிஸார் அங்கு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. (செ-9)

## திடீரென மய...

பாணத்திலிருக்கும் தனது உறவினரின் வீட்டிற்கு செல்வதற்காக புளியங்குளம் சந்தியிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்த போது திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

இதையடுத்து சக பயணிகளால் மீட்கப்பட்டு புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது இடைவழியில் அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம்பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மரண விசாரணைகளும் இடம்பெற்றிருந்தன.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி மற்றும் புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (செ-250,15, 310,281)

## ரவிராஜ் வழக்கு...

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் தரப்பு வழக்கறிஞர் என்ற வகையில் தான் இந்த மேன்முறையீட்டை மேற்கொள்ளவுள்ளதாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

நடராஜா ரவிராஜ் கொலை வழக்கு தொடர்பான தீர்ப்பு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது.

விஷேட ஜூரி சபை முன் நடந்த இந்த வழக்கு விசாரணைகளில், குற்றம்சாட்டப்பட்ட ஐவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

## திருச்சியில் ஈழ...

தலை செய்யுமாறு வலியுறுத்தி நேற்று மூன்றாவது நாளாக திருச்சி விசேட முகாமில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்தியாவிற்கு கோவில் தரிசனத்துக்காக சென்றிருந்த போது விடுதி ஒன்றில் தங்கிருந்த தம்மை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்ததாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தின் திருச்சி விசேட முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 11 ஈழத் தமிழர்கள், தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (11)

## ஒற்றையாட்சியை...

கிணைப்பாளர் நுவான் பலன்துவ தெரிவித்துள்ளார்.

செனட் சபையொன்றை உருவாக்குதல் மற்றும் ஆளுநருக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்துதல் உள்ளிட்ட உப குழுக்களின் பரிந் துரைகள் ஒற்றையாட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளமை குறித்து கேள்வி எழுப்பிய போதே ஜனாதிபதி இந்த உறுதி மொழியை வழங்கியதாக அவர் தெரிவித்தார். (இ-3)

## விமான விபத்து...

கள் சிரியாவில் முகாமிட்டுள்ளனர்.

அண்மையில் சன்னி பிரிவு கிளர்ச்சிப் படைகளின் தலைமையிடமான அலெப்போ நகரை ரஷ்ய உதவியுடன் அதிபர் ஆசாத் படை கைப்பற்றியது. எனவே இந்த புத்தாண்டை சிரியாவில் உற்சாகமாகக் கொண்டாட ரஷ்ய ராணுவம் திட்டமிட்டது.

இதற்காக ரஷ்ய ராணுவ இசைக் குழுவைச் சேர்ந்த 64 இசைக் கலைஞர்கள், ராணுவ வீரர்கள், பத்திரிகையாளர்கள் உட்பட 84 பேரை அழைத்துக் கொண்டு டியு-154 ராணுவ விமானம் ரஷ்யாவின் அட்லரில் இருந்து சிரியாவின் லடாகியா விமானப் படைத் தளத்துக்கு நேற்று அதிகாலை புறப்பட்டது. இதில் விமானிகள் உட்பட 8 விமான ஊழியர்களும் இருந்தனர்.

விமானம் புறப்பட்ட 20-வது நிமிடத்தில் கருங்கடல் பகுதியில் பறந்து கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராதவிதமாக கட்டுப்பாட்டு அறை ரேடரில் இருந்து விமானம் மறைந்தது. உடனடியாக கருங்கடல் பகுதிக்கு ரஷ்ய கடற்படையின் 10 போர்க்கப்பல்கள், 5 ஹெலிகாப்டர்கள், ஏராளமான ரோந்து படகுகள் மற்றும் ஆளில்லா விமானம், ஆளில்லா நீர்மூழ்கிகள் ஆகியவை தேடுதல் பணிக்காக அனுப்பப்பட்டன.

பல மணி நேர தேடுதல் வேட்டைக்குப் பிறகு ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், விமான விபத்தில் யாரும உயிர்பிழைக்கவில்லை என்று அறிவித்தது. சம்பவ பகுதியில் இதுவரை 4 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட நீர்மூழ்கி வீரர்கள் கடலில் மூழ்கி உடல்களை தேடி வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக உயர்நிலை விசாரணை நடத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின் உத்தரவிட்டுள்ளார். அதன்படி விசாரணை குழுவினர் சம்பவ பகுதிக்கு விரைந்துள்ளனர்.

விமானத்தின் கறுப்பு பெட்டிகளை கைப்பற்றினால் மட்டுமே என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ள முடியும் என்று ரஷ்ய ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (11)

## சமஷ்டியை முன்...

இவ்வாறான தமிழ் தலைவர் ஒருவர் எதிர்கட்சித் தரைவராக இருப்பது நாட்டு மக்கள் செய்த பாக்கியம் என கூறி இரா.சம்பந்தனுக்கு புகழாரம் சூட்டிய அமைச்சர் மகிந்த அமரவீர, சம்பந்தன் போன்ற சிறந்த அரசியல் தலைவர் ஒருவர் எதிர்கட்சித் தலைவராக இருக்கும் காலத்திலேயே நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சி னைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே அமைச்சர் மகிந்த அமரவீர இந்தக் கருத்துக்களை முன் வைத்திருக்கின்றார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாம் இந்த அரசாங்கத்தில் இருக்கும் வரை அதேபோல் உண்மையான பௌத்த மதத்தவனாக இருக்கும் ஜனாதிபதி மைத்திரியால சிறிசேன ஜனாதிபதி பதவியில் இருக்கும் அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை ஒருபோதும குறைக்க இடமளிக்கப்படமாட்டாது. அது மாத்திரமன்றி நீக்கவும் அனுமதியோம். அதேபோல் சமஷ்டி அல்லது வேறு எந்த வழியிலாகவோ நாட்டை பிரிக்க நாம் இடமளிக்க மாட்டோம் என்பதையும் உறுதிப்படத் தெரிவித்திருக்கின்றோம்.

இவை மாத்திரமன்றி வடக்கு - கிழக்கு அல்லது வேறு எந்த மாகாணங்களையும் இணைக்கவும் இடமளிக்க மாட்டோம். எதிர் கட்சியில் இருக்கும் அரசியல்வாதிகள் கூறுவது போல் ஒற்றையாட்சி நீக்கப்படவோ சமஷ்டி முறை ஏற்படுத்தவோமாட்டாது என்பதை மாநாயக்கத் தேரர்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம். அத்துடன் சில ஊடகங்களில் வெளியான புதிதாக தேசிய கீதமொன்று தயாரிக்கப்படுவதாக வெளியாகும் செய்திகளிலும் உண்மையில்லை என்பதை எடுத்துரைத்தோம். அதனை சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் பாடலாம்.

சம்பந்தன் இருக்கும் காலத்திலேயே தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

எமது நாட்டில் தற்போது தமிழர் ஒருவராக இரா.சம்பந்தன் எதிர்கட்சித் தலைவராக இருக்கின்றார். சிறந்த அரசியல்வாதியான இரா.சம்பந்தன், வரலாற்றில் எமக்குக் கிடைத்த சுமுகமாக பிரச்சினைகளை பேசித் தீர்த்துக்கொள்ளக் கிடைத்த சிறந்த அரசியல் தலைவர் ஆவார். சம்பந்தனுடன் நாமும் கலந்துரையாடினோம். அந்த சந்தர்ப்பங்களில் இந்த நாடு பௌத்த நாடு என்பதை அவரும் ஏற்றுக்கொண்டதுடன் பௌத்த மதத்திற்கான முன்னுரிமையை நீக்க வேண்டும் என்று ஒருபோதும் தான் கோரிக்கை விடுக்கப்போவதில்லை என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தாலும் தான் அதனை முன்வைக்கப் போவதில்லை என திட்டவட்டமாக அவர் பல தடவைகள் எம்மிடம் கூறியிருக்கின்றார். அதேபோல் தான் ஒருபோதும் சமஷ்டி கோரிக்கையை முன்வைக்கப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

சம்பந்தன் போன்ற மிகவும் மதிக்கப்படும் ஒரு அரசியல்வாதியிடமிருந்து இவ்வாறான கருத்துக்களை வெளியாகும் போதே நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (11)

## கரடி தாக்கியதி...

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மாமடுவப் பகுதியைச் சேர்ந்த கு.சலாவதி (வயது-56) எஸ்.சிறிலதா (வயது-53) ஆகிய இருவரே இவ்வாறு காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (15)

## தமிழீழத்துக்கான அங்கீகாரமே!

### ஹெகலிய அச்சம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு மீதான சர்வஜன வாக்கெடுப்பு வடக்கில் வெற்றி பெற்று அது தனித் தமிழீழத்துக்கான சர்வதேச அங்கீகாரத்தைக் கோரும் ஆபத்தாக மாறும் என்று மகிந்த ராஜபக்ஷ அணி நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் கருத்துக் கூறிய போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு.

நாட்டில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்துவதே புதிய அரசியலமைப்பின் நோக்கமாகும். தமிழர்களுக்கு பிரச்சினை உண்டு என்றும். அதற்கான தீர்வாகவே புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படுகின்றது என்றும் சாக்குப் போக்குச் சொல்லப்படுகின்றது.

இந்த நாட்டில் யாருக்குப் பிரச்சினை இல்லை? எல்லா இன மக்களும் ஏதோவொரு வகையில பிரச்சினைகளுடன் தான் வாழ்கின்றனர். தமிழர்கள் எதிர்நோக்குவது நிர்வாக ரீதியான பிரச்சினையாகும். அதற்கு நிர்வாக ரீதியிலான தீர்வைப் பெற்றுக் கொடுத்தால் சரி. ஆனால், நாட்டைப் பிளவுபடுத்தக் கூடிய அரசியலமைப்பு தேவை இல்லை.

புதிய அரசியலமைப்பு சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் அது தோல்வியடையும். ஆனால், வடக்கில் 99 வீதமான வாக்குகளால் அது வெற்றி பெறும். அந்த வெற்றி நாட்டுக்குப் பேராபத்தைக் கொண்டு வரும்.

அந்த வெற்றியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திர ரீதியில் பயன்படுத்தும் என அவர் தெரிவித்தார். (11)

## ரவிராஜ் படு...

புத்தான் வருகிறது என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

நண்பர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களையும், ஏனைய முற்போக்காளர்களையும் கடும் ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளது.

2006ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி காலை வேளையில் நடைபெற்ற இந்த படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை கடந்த சில காலமாக விறுவிறுப்பாக நடைபெற்றபோது, ஏற்பட்ட எதிர்பார்ப்பு இப்போது சலிப்பில் முடிந்திருக்கின்றது.

இந்த வழக்கு தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பாக ஆஜரான தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேன்முறையீடு செய்யப்போவதாக கூறியிருப்பதை வரவேற்கிறேன்.

அதேவேளை இந்த வழக்கு விசாரணையில் பொலிஸ் மற்றும் சட்டமாஅதிபர் திணைக்களம் ஆகியவற்றின் போக்குகள் குறித்தும் திருப்தியடைய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இது குறித்து பிரதமருடனும், கூட்டமைப்பு தலைவருடனும் உரையாட உள்ளேன்.

இந்நாட்டின் நீதித்துறை மீது உலகமும், தமிழர்களும் நம்பிக்கை வைக்க முடியுமா என்ற கேள்வி இன்று மீண்டும் எழுந் திருப்பது நியாயமானது என நினைக்கின்றேன்.

இந்த தீர்ப்பு நிச்சயமாக எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மனிதவுரிமை கூட்டத்தில் எதிரொலிப்பதை தவிர்க்க முடியாதெனவும் தெரிவித்துள்ளார். (செ-11)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**
பிரான்ஸ் FOREIGN MINISTRY & French EMBASSY யின் கீழ்
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்...
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF, உலகம் முழுவதும் 1000 கிளைகள். இலங்கையில் சர்வதேச பிரெஞ் Certificate ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
**பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள் : யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.**
**இலவசம் :** PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை ...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து ...
செல்வோர் : யாழ், வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.
**31.12.2016 முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.**
**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (7142)
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**
பண்டிகைக் காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட
021 221 5656
070 330 5500
அன்னா & கோ (C-6682)
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்



**ECONOMICS HALL**
நாவலர் வீதி, யாழ் நகர்
(புகையிரதகடவை அருகில்)
**A/L 2019**
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம் (ஞாயிற்றுக்கிழமை)
ஜனவரி 01 காலை 9 மணி (C-7008)
குறிப்பு :- ஜனவரி 31 வரை அனுமதிக் கட்டணம் இலவசம்.
தனித்துவமான ஆசிரியர்குழுவின் அர்ப்பணிப்பான வழிகாட்டல்.



**V2 TRAVELS**
குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா(UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226236
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை (C-6845)


## கண்ணீர் அஞ்சலி

**உயர்திரு. தம்பிப்பிள்ளை காசிநாதன்**
(ஓய்வு பெற்ற பிரதிப்பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



ஆசிரியர் திரு.**தேவசகாயம் ஜெயக்குமார்** அவர்களின் அன்பு மாமனார் உயர்திரு.**தம்பிப்பிள்ளை காசிநாதன்** (ஓய்வு பெற்ற பிரதிப்பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி (C-7012)

**ஆசிரிய நண்பர்கள் கொக்குவில்**

## கண்ணீர் அஞ்சலி

**உயர்திரு. தம்பிப்பிள்ளை காசிநாதன்**
(ஓய்வு பெற்ற பிரதிப்பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



ஆசிரியர் திரு.**தேவசகாயம் ஜெயக்குமார்** அவர்களின் அன்பு மாமனார் உயர்திரு.**தம்பிப்பிள்ளை காசிநாதன்** (ஓய்வு பெற்ற பிரதிப்பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அன்னாரின் இழப்பினால்துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி (C-7013)

**பல்கலைக்கழக நண்பர்கள்**


**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை


365
72
(Express Service)
(Door to Door Service)
Call 021 222 3536
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Call 021 222 6113
aramex FedEx (C-6800)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.